Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 280 | சனிக்கிழமை | ஆவணி 18 ஆம் நாள் 04 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## சாவு 202

கொழும்பு, செப். 4
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 202பேர்உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய 19

# செப்ரெம்பர் 13வரை ஊரடங்கு நீடிப்பு!

கொழும்பு, செப்ரெம்பர் 04

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 19

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமை யில் நேற்றுமுற்பகல் நடைபெற்ற கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக் கப்பட்டது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல, கொரோனா கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையத்தின் பிர தானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உட்பட விடயப்பரப்புடன் தொடர்பு 19



## கோதுமை மா விலை ரூ.12 ஆல் அதிகரிப்பு

கொழும்பு, செப். 4

நாட்டில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக பொருள்களின் விலைகள் அதிகரித் துவரும் நிலையில், கோதுமை மாவின் விலையை பிரீமா நிறுவனம் கிலோவுக்கு 12 ரூபாவால் அதிக ரித்துள்ளது.

ஏற்கனவே சீனி, பருப்பு, சிமெந்து ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் நாட்டில் பால்மாவுக்கும் தட்டுப்பாடு ஏற் 19

கோதுமை மா மூடைகளில்

## விலை, திகதி மாற்றம்செய்து விற்கமுயன்றவர் மீது வழக்கு

வவுனியா, செப். 4

கோதுமை மா மூடையில் காலாவதி திகதி, உற்பத்தி திகதி, விலை என்பவற்றை மாற்றம்செய்து, அதன் மேல் புதிய விலை பொறித்து விநியோகிப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கோதுமை மா மூடைகளை வவுனியா மாவட்ட பாவனை யாளர் அலுவல்கள் 19

## மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தம் அடக்கவே அவசரகாலச் சட்டம்



விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 4

தமக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தமாகின்றார் கள் என்பதை அறிந்துகொண்டு அவர்களை அடக்கி ஆள ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை உபயோகித்துள்ளார். இது சர்வாதிகாரத் 19

## நிர்ணயவிலையை மீறினால் 10 லட்சம் ரூபா தண்டம்

சபைக்கு வருகிறது சட்டவரைவு

கொழும்பு, செப். 4

"அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட் டுப்பாட்டு விலைக்கு அதிகமாக சீனி மற்றும் அரிசி விற்பனை செய்யப்படு மானால் அத்தகைய நபர்களுக்கு எதி ராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது நடைமுறையிலுள்ள ஆயி ரம் ரூபா தண்டப்பணம் 10 லட்சமாக அதிகரிக்கப்படும். அதற்கான சட்டத்திருத்தம் செவ்வாயன்று 19

## மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

மருத்துவ அங்கீகாரம் கிடைத்தவுடன், பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்ற முடியும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். அதுமட்டுமன்றி, 20 - 29 வயதுக்கு இடைப் பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் 19

## தொற்று 3,644

கொழும்பு, செப். 4

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 3 ஆயிரத்து 644 பேர் நேற்று அடையா ளம் காணப் 19

உயர் நீதிமன்றில்

## தீர்ப்புகளை தமிழில் வெளியிட வேண்டும்



அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

உயர் நீதிமன்றத்தால் ஆங்கிலத்தில் மட்டுமே தீர்ப் புக்களை வெளியிடுவது பெரும்பாலும் சிக் கலுக்குரியது. அத்துடன் ஆங்கில மொழி 19

## ஒரே கிராமத்தில் 60 பேருக்கு தொற்று!

வவுனியா, செப். 4

வவுனியா சாந்தசோலை கிராமத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேருக்குத்தொற்று உறுதிசெய் யப்பட்டுள்ளது.

வவுனியா சாந்தசோலை கிரா 19

கொரோனாவால்

## யாழ்ப்பாணத்தில் 6 பேர் சாவு

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ள னர்.

அவர்களில் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்ட 82 வயது டைய முதியவர் என்று யாழ்ப் பாணம் போதனா மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித் தன. 19

கொரோனாவால்

## வவுனியாவில் மூவர் சாவு

வவுனியா, செப். 4

வவுனியாவில் மூவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தனர்.

அவர்களில் ஒருவர் சுகவீனம் காரணமாக 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமான தலைவர்களுக்கே அவசரகாலச் சட்டம் தேவை

ராஜித சேனாரத்ன எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, செப். 4**

**பலவீனமான தலைவர்களே அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்துவார்கள். அரசுக்காகவும், சீனாவுக்காகவுமே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது எனக்கூறப்பட்டாலும் மக்களை அடக்கி ஆள்வதே இதன் நோக்கமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாட்டினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, இருக்கும் சட்டத்திட்டங்களை வைத்து முகாமை செய்ய முடியாத பலவீனமான தலைவர்கள்தான் மேலும் அதிகாரத்தைக் கோரும் சட்டங்களை முன்வைப்பார்கள்.

அவசரகாலச் சட்டம் 2011 இல் நீக்கப்பட்டது. இது பெரும் வெற்றியாகும். 2015 க்கு பிறகு எமது ஆட்சியின்போது அந்தச் சட்டத்தை பயன்படுத்தியது கிடையாது. அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடந்தன. ஆனால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு ஜனநாயக விரோத சட்டங்களைப் பயன்படுத்தியது கிடையாது.

மக்களுக்கு தடையின்றி உணவுகளை வழங்கவே அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும், அதன் பின்னணியில் வேறு நோக்கமே இருக்கின்றது. எல்லா விடயங்களையும் ஜனாதிபதி அத்தியாவசியமாக்கலாம். ஆசிரியர் சேவையைக்கூட அத்தியாவசியமாக்கி, சேவையை முன்னெடுக்காவிட்டால் ஜோசப் ஸ்டாலின் போன்றவர்களை கைது செய்யலாம்.- என்றார். (ஒ.44)

# அரசு கூறுவதை நம்பி நாம் ஏமாறக்கூடாது

சோனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 4

சர்வதேச நெருக்கடியை சமாளிப்பதற்காக மனித உரிமைப் பேரவையுடன் ஒத்துழைப்போமென, தாம் தப்புவதற்காக அரசு கூறுவதை நாங்கள் நம்பி ஏமாந்துவிடக் கூடாது.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

அவருடைய இல்லத்தில் நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாக பிளவுபட்டு தனித்தனி கட்சிகளாக செயற்படுவது எங்களைப் பலவீனப்படுத்திவிடும்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், இலங்கை அரசின் நிலைப்பாடு மற்றும் கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது தொடர்பில் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர், உரையாற்றுவார் என கருதுகிறோம்.

அதையொட்டி தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளும் ஒன்றுபட்டு மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு பின்னர் இலங்கை அரசின் விரோதமான செயற்பாடுகள் தொடர்பாக எங்கள் மதிப்பீட்டை நாங்கள் அனுப்ப வேண்டும்.

இது தொடர்பாக இரண்டு விதமான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஒன்று கட்சிகள் மத்தியில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை அனுப்பி வைப்பது, இரண்டாவது பொது அமைப்புகளிடம் இருந்து கிடைக்கின்ற தகவல்களை மையமாக வைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை அனுப்பி வைப்பது என்பனவாகும். அநேகமாக அந்த அறிக்கை இன்று நண்பகலுக்கு முன்பு உருவாக்கப்பட்டுவிடும். அதைவிட கட்சிகளின் சார்பிலே சில அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு அனுப்ப வேண்டும்.- என்றார். (த-26)

# கடை உடைத்து பணம் திருட்டு

மன்னார், செப். 4

மன்னார் நகர் பகுதியில் மீன் சந்தைக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஒரு தொகைப் பணம் திருடப்பட்டுள்ளது.

மழை காரணமாக மின்சாரம் சிறிது நேரம் தடைப்பட்டிருந்தநிலையில், குறித்த வர்த்தக நிலையத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-56)

சிறையிலுள்ள ரிஷாத்துக்கு

## அலைபேசி வழங்கிய ஜெயிலருக்கு இடமாற்றம்


வவுனியா, செப். 4

மகசின் சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு அலைபேசி வழங்கினார் என்ற குற்றச்சாட்டில், ஜெயிலர் வவுனியாவுக்கு இடமாற்றம்செய்யப்பட்டார்.

ரிஷாத் பதியுதீனின், சிறையிலிருந்து அலைபேசி ஒன்று வீசப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தநிலையில், அந்தச் சிறைச்சாலையின் ஜெயிலர் வவுனியா சிறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-110)

# தையிட்டியில் மோட்டார் குண்டு



யாழ்ப்பாணம், செப். 4

பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தையிட்டி பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று நேற்று கண்டறியப்பட்டது.

குறித்த காணி உரிமையாளர் காணியை துப்புரவாக்கும் போதே குறித்த மோட்டார் குண்டு அவதானிக்கப்பட்டது.

பலாலி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து அதனை இன்று மீட்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-27)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நீதி கிடைக்கும்

மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

ஈஸ்டர் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நீதி நியாயம் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையின் பொலிஸ் சேவை 155 ஆவது வருடத்தைப் பூர்த்தி செய்ததை முன்னிட்டு ஊடகங்களுக்கு நேற்று கருத்துரைக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையின் பொலிஸ் சேவை 155 ஆவது வருடத்தைப் பூர்த்தியாக்கியுள்ளது. சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க பொலிஸார் தங்களின் பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல் சேவையில் ஈடுபடுகின்றார்கள். வீதியில் சேவையில் ஈடுபடும் பொலிஸாரின் மனநிலையைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பொலிஸார் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதற்காகப் பொதுமக்கள் பொறுப்பற்ற வகையில் செயற்பட முடியாது. இரு தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்பட்டால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளில் பொலிஸார் திறம்படச் செயற்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இரண்டு வருட காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களம் சிறந்த முறையில் செயற்பட்டு பல சாட்சியங்களைத் திரட்டியுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நீதி நியாயம் வழங்கப்படும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிச்சயம் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்" என்றார். (த-22)

# இலங்கையிலிருந்து சென்ற தம்பதி தமிழகத்தில் கைது!

தமிழகம் தூத்துக்குடி அருகே தலைமறைவாகி இருந்த இலங்கைத் தம்பதியை இந்திய கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து படகு மூலம் தூத்துக்குடிக்கு சென்ற இந்தத் தம்பதி, தூத்துக்குடி மாவட்டம் வைப்பாறு பகுதியில் தங்கி உள்ளனர் என்று மதுரையில் உள்ள கியூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் இருவரும் இலங்கையைச் சேர்ந்த பலருடன் படகு மூலம் கடந்த பெப்ரவரி மாதம் தூத்துக்குடிக்கு பயணித்திருந்தனர். அவர்களுடன் சென்றவர்கள் அங்கிருந்து கனடா செல்லத் திட்டமிட்டிருந்தனர். இந்த விடயம் இவர்களை கைது செய்த பின்னர் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்தது. அவர்கள் இருவரிடமும் கியூ பிரிவு பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (எ-இ)

யாழ்.பல்கலை மருத்துவபீடத்தில்

# பி.சி.ஆர் பரிசோதனைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனைகளைமீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கொரோனாப் பரவல் அதிகரித்து வரும் நிலையில், பி.சி.ஆர். பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்வதற்கான ஆளணியை நியமிப்பதற்குத் துணைவேந்தர் நடவடிக்கை எடுத்ததை அடுத்து மூன்று பேர் பல்கலைக்கழகத்தின் நிதி மூலத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பி.சி.ஆர். ஆய்வுகூடத்தில் பணியாற்றிவந்த 4 மருத்துவ ஆய்வுகூடத் தொழில் நுட்பவியல் பயிலுநர்கள் உள்ளகப் பயிற்சிக்கான நியமனம் பெற்றுச் சென்றதனால், பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆளணிப் பற்றாக்குறை காரணமாக கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து மருத்துவ பீடத்தில் பி.சி. ஆர். பரிசோதனைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதனையடுத்து உடனடியாக ஒப்பந்த அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் நிதியில் இருந்து தற்காலிகமாகத் தேவையான ஆளணியை உள்வாங்குவதற்குத் துணைவேந்தர் பணித்திருந்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நேர்முகத்தேர்வின் மூலம் மூன்று பேரை நியமிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனால், விரைவில் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சிவப்பு அபாய வலயத்துக்குள்

## எச்சரிக்கிறது மருத்துவ சங்கம்



**கொழும்பு, செப். 4**

**நாட்டில் தற்போது பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இலங்கையானது இன்னும் அதி அபாய சிவப்பு எச்சரிக்கை மட்டத்திலேயே இருக்கின்றது என்று இலங்கை மருத்துவச் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அச்சங்கத்தின் உப தலைவர் விசேட மருத்துவர் மனில்க சுமனதிலக்க,

நாட்டிலுள்ள தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தொற்று பரவல் விகிதத்தின் அடிப்படையில் இலங்கை இன்னும் அதி அபாய சிவப்பு வலயமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

இதனைப் பச்சை வலயமாக மாற்றிக்கொள்ள அதாவது சுற்றுலாப் பயணிகளுக்கு வருவதற்கு உகந்த சூழல் ஏற்பட வேண்டுமெனில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 950 ஆகக் குறையவேண்டும். நாளாந்தம் மேற்கொள்ளப்படும் கொரோனா பரிசோதனைகளில் 2.5 சதவீதத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் பச்சை வலயத்துக்குள் வரலாம். பயணக்கட்டுப்பாடு ஊடாக இதுவே எதிர்ப்பார்க்கப்படுகின்றது, என்றார் அவர்.

இதேவேளை, இந்தியாவை விடவும் மோசமான நிலையில் அபாயகரமான கட்டத்தில் இலங்கை உள்ளது.

தெற்காசியாவில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடாக இலங்கை அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா சாவுகளானவை 19 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர் மருத்துவ நிபுணர்கள்.

தூரநோக்குத் திட்டங்களை விடவும் மக்களைப் பாதுகாக்க உடனடித் தீர்மானங்களை இப்போது முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஒ.22,44)






# நியூஸியில் இலங்கையர் கத்திக்குத்துத் தாக்குதல்

## 6 பேர் காயம்; தாக்குதல் நடத்தியவர் மீது சூடு

ஒக்லாண்ட், செப்.4

நியூஸிலாந்தின், ஒக்லாந்திலுள்ள அங்காடி ஒன்றில் மக்கள் மீது தாக்குதலை நடத்திய ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். நியூஸிலாந்திலுள்ள பிரபல விற்பனை அங்காடி ஒன்றுக்குள் புகுந்த இந்த நபர், கத்திக் குத்துத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். அதில் ஆறு பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த இலங்கையர் ஒருவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்ட நிலையில், பொலிஸாரால் அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து பெரும் பதற்ற நிலை காணப்பட்டது என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த இலங்கையர் 2011ஆம் ஆண்டு நியூசிலாந்தில் தஞ்சம் அடைந்தவர் என்று அந்த நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கட்டுப்பாட்டு விலையில் சீனி வழங்க இணக்கம்!

கொழும்பு, செப்.4

அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு சீனியை விநியோகிக்க, சீனி இறக்குமதியாளர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர் என்று, கூட்டுறவு சேவைகள், விற்பனை மேம்பாட்டு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இணக்கப்பாட்டுக்கு அமைவான கடிதத்தை வர்த்தக அமைச்சிடம் கையளிக்க அவர்கள் இணங்கியுள்ளனர். அரிசி மற்றும் சீனிக்கான உச்சபட்ச சில்லறை விலைகள் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய, ஆகக் கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக இறக்குமதியாளர், வழங்குநர், உற்பத்தியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரும் அரிசி மற்றும் சீனியை விற்பனை செய்யவோ, வழங்கவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு வெளிப்படுத்தவோ முடியாது. என்றார். (எ-இ)

# உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பகாலம் நீடிப்பு

கொழும்பு,செப்.4

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்பகாலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்போர் இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்றைக் கருத்தில் கொண்டு, குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.donet.lk என்ற இணையத்தளத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ,4)

# கட்டுப்பாட்டுக்குள் பரீட்சைகளை நடத்துவது பொருத்தமானதல்ல

## பல்கலை ஊழியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த நாட்டில் கடுமையான கட்டுப்பாட்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழக பரீட்சைகளை நடத்துவது பொருத்தமானதல்ல என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தால் துணைவேந்தருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழகத்தில் மிகக் கடுமையான நடமாட்டக் கட்டுப்பாட்டுக் காலத்தில் கூட பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு கல்விசாரா ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர்.

கல்விசாரா ஊழியர்கள் ஒத்துழைப்பு வழங்குவதால் தொற்று குறைந்துவருகின்றது என்று அர்த்தமல்ல. பரீட்சைகள் நடைபெற இது உகந்த காலம் அல்ல என்பதாகும். கல்விசாரா ஊழியர்களின் குடும்பங்களின் பாதிப்பு வீதமும் கடந்த சில தினங்களாக அதிகரித்துச் செல்கின்றது. வலிந்து தொற்றாளராக்கப்படும் ஆபத்தான சூழ்நிலையிலும் எமது அங்கத்தவர்கள் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

அதேவேளை பரீட்சைகளைப் பிற்போடுமாறு மாணவர்கள் இணைந்து எழுத்து மூலம் கோரிக்கை விடுத்த பின்பும், பரீட்சைகள் கடுமையான நடமாட்டக் கட்டுப்பாட்டுக் காலத்திலும் தொடர்ந்து நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாம் எமது ஊழியர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாது அவர்களை பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுமாறு தூண்டியமை முறையற்றது என்று தற்போது உணருகிறோம். பல்கலைக்கழகமும், மருத்துவ பீடமும், தொழிற்சங்கத்தினரான நாமும் சமூகப்பரவலைத் தடுக்க எந்த அறிவுரைகளை வழங்கினோமோ, அதை நாமே மீறுவது அபத்தமானது.

பல்கலைக்கழக கொவிட் செயலணிக்குழு உண்மையில் இயங்குகிறதா? அதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா? என்ற எமது சந்தேகத்தையும் இந்தத் தருணத்தில் நாம் வெளிப்படுத்தியாக வேண்டும். மருத்துவ பீடத்திலும், சித்த மருத்துவ அலகிலும், விஞ்ஞான பீடத்திலும், வேறு பீடங்களிலும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் கல்விசாரா ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்கள் மட்டுமல்லாது பரீட்சைக் கடமைகளுக்காக பணிக்கமர்த்தப்படும் அனைவரும் தொற்றாளர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் சீனாவின் ஊடுருவல்கள்

## கவலையடைகிறது இந்தியா



**கொழும்பு, செப். 4**

**வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்ற போர்வையில் சீனா ஊடுருவுவது தொடர்பில் புதுடில்லி கவலையடைவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

படுமோசமான கடன் கொள்கைகளின் மூலமாக ஏற்கனவே இலங்கைக்குள் ஆழமான மூலோபாய ஊடுருவல்களைச் செய்திருக்கும் சீனா, இந்திய கரையோரத்துக்கு நெருக்கமாக அதன் பிரசன்னத்தை நிறுவுவதை நோக்கி செயற்படுகின்றது என்று இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

'இலங்கையின் வடமாகாணத்தில் சீனாவின் பொருளாதார நடவடிக்கைகள் பெருகுவதும் உத்தேச உட்கட்மைப்பு அபிவிருத்தி திட்டங்களும் நிச்சயமாக இந்தியாவுக்கு கவலை தரும் விடயங்கள்தான். இந்தத் திட்டங்கள் பின்னர் மூலோபாய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட முடியும்' என்று புதுடில்லி வட்டாரம் ஒன்றை இந்திய ஊடகங்கள் மேற்கோள்காட்டியுள்ளன.

சீனாவின் திட்டங்கள் முன்னதாக, பெருமளவுக்கு தென்னிலங்கையுடன் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன. ஆனால், தற்போதைய கோத்தாபய அரசு வட இலங்கையிலும் சீனாவின் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு வசதிசெய்து கொடுக்கின்றது. வடபகுதித் தமிழர்களின் உணர்வுகளை இலங்கை அரசு அலட்சியம் செய்கிறது. இந்த நிகழ்வுப்போக்குக்ளை நாம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறோம், என்றும் அந்த வட்டாரம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் இருக்கும் சப்த தீவுகளில் மூன்றில் ஒரு கோடி 20 இலட்சம் டொலர்கள் பெறுமதியான காற்று சூரிய சக்தி மின் திட்டமொன்றை சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கு இலங்கை எடுத்த தீர்மானத்தை இந்தியா ஏற்கனவே ஆட்சேபித்திருந்தது. இந்தத் தீவுகள் தமிழ்நாட்டின் கரையோரத்தில் இருந்து வெறுமனே 50 கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்திருக்கும் நிலையில், மேற்படி மின்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒரு கோடி 20 லட்சம் டொலரை இலங்கைக்கு வழங்க இந்தியா முன்வந்தது.

'உள்ளூர் விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்ததையும் பொருட்படுத்தாமல், கடலட்டை வளர்ப்புக்கான இன்னொரு சீனக் கூட்டு முயற்சிக்காக வட பகுதி கரையோரக் கிராமமொன்றில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய பல ஊடுருவல்களை இந்தப் பிராந்தியத்தில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது, என்று இன்னொரு புதுடில்லி வட்டாரம் குறிப்பிட்டதாக இந்திய ஊடகங்களின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானுடனும் இந்தியாவுடனும் கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு செய்யப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையை இலங்கை மீறியதனால் புதுடில்லி ஏற்கனவே குழப்பமடைந்திருக் கிறது. திருகோணமலையில் அமைந்திருக்கும் எண்ணெய் தாங்கித் திட்டம் தொடர்பாகவும் ஏற்கெனவே முரண்பாடுகள் நிலவுகின்றன.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரை, 99 வருடகால அம்பாந்தோட்டைத் துறைமுக குத்தகை ஒப்பந்தம் தொடக்கம் புதிய கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் வரை எதையுமே பிரச்சினை எதுவுமின்றி சுமுகமாக கையாள முடிகிறது. இலங்கைக்கு புறம்பாக, சீசெல்ஸ், மொரீசியஸ், மாலைதீவு, பங்களாதேஷ், மியன்மார் மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளுடன் கடல்சார் இணைப்புக்களை ஏற்படுத்திக்கொண்டு இந்து சமுத்திர பிராந்தியம் முழுவதும் திட்டமிட்ட முறையில் சீனாவால் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தக் கூடியதாகவுள்ளது.

# நெருக்கடிப் பொறிக்குள் இருந்து மீள சர்வகட்சிப் பொறிமுறையே ஒரே வழி!

## ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் யோசனை முன்வைப்பு

கொழும்பு, செப். 4

சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் இதர பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டுமெனில் சர்வகட்சிப் பொறிமுறையை உருவாக்குவதே சிறந்த வழி. அதன் ஊடாகவே பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைத் தேட முடியும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தரப்புகளையும் குறித்த பொறிமுறைக்குள் உள்வாங்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்கவேண்டுமெனில் தற்போதைய சூழ்நிலையில் நாம் அரசியல் ரீதியில் பிளவுபடக்கூடாது. எனவே, அனைவரையும் உள்ளடக்கிய பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைக்கின்றேன். எனவே, கட்சியைப் பாதுகாக்கும் நடவடிக்கையை விடுத்து நாட்டை மீட்பதற்கு ஒத்துழைக்குமாறு ஆளுங்கட்சியிடம் கேட்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ்க் கூட்டமைப்பு என பாகுபாடுவேண்டாம். திறமையானவர்கள் அக்கட்சிகளில் உள்ளனர். எனவே, அவர்களை உள்வாங்கி ஆலோசனைகளைப் பெறவும். அப்போது சுகாதாரம், பொருளாதாரம், கல்வி உட்பட பல பிரச்சினைகளில் இருந்து மீளமுடியும். அத்துடன், மாபியாக்களுக்கும் முடிவு கட்டமுடியும்.

அதேவேளை, சீனிப்பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன. தகவல்களை வெளியிட்டன. அவற்றுக்கு செவிமடுத்து அரசு நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இந்நிலைமை ஏற்பட்டிருக்காது- என்றார். (ஒ,44)


# கடமைகளைப் பொறுப்பேற்றார் மருத்துவர் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக மருத்துவர் த.சத்தியமூர்த்தி நேற்று மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மேற்படிப்புக்காக இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் லண்டனுக்குச் சென்றிருந்த அவர், 6 மாதக் கற்கைநெறி நிறைவில் விடுமுறையில் நாடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக மருத்துவமனைப் பணிப்பாளராக மீண்டும் பொறுப்பேற்றுள்ளார். (ஒ,26)



# 4 மணிநேரத் தேடுதலில் சிக்கிய மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், செப். 4

வாள்வெட்டு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய நேற்று அதிகாலை 4 மணி நேரம் தேடுதல் நடத்திய பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் ஒன்றை மாத்திரமே மீட்டுள்ளனர். கொக்குவில் பகுதியில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் நேற்று அதிகாலை 3.30 மணி தொடக்கம் காலை 7.30 மணி வரை தேடுதல் நடத்தப்பட்டது. இந்தச் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் அந்தப் பகுதியில் மறைந்திருப்பதாக இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றதாகவும் அதன் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் முன்னெடுக்கப்பட்டதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (ஒ,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY GRANTS COMMISSION - SRI LANKA

யாழ். பல்கலையில்

# மனித உயிரியல் விஞ்ஞானத்துறை உருவாக்க ஆணைக்குழு அனுமதி

கொழும்பு, செப். 4

யாழ்ப்பாண பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் நான்காவது புதியதுறையாக மனித உயிரியல் விஞ்ஞானத்துறை உள்வாங்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவையின் பரிந்துரையுடன்; பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்துடன் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சமர்பிக்கப்பட்ட முன்மொழிவு கடந்த மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர நிர்ணயக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மனித உயிரியல் விஞ்ஞானத் துறைக்கான முன்மொழிவு அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபின், வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ.இ)

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின்

# சடலங்களை எரிக்க கட்டணம் செலுத்த முடியாதவர்கள் மேயரை தொடர்புகொள்ளலாம்



யாழ்ப்பாணம், செப். 4

**கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு யாழ். மாநகர சபையால் 6 ஆயிரத்து 500 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. அதனைச் செலுத்த முடியாதவர்கள் யாராவது தனிப்பட்ட முறையில் என்னைத் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு உதவ முடியும்.**

இவ்வாறு யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைந்துள்ள மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றனர். இந்த மயானம் யாழ் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டது.

மயானத்தில் நாளொன்றுக்கு 5 உடல்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. எனினும் எதிர்வரும் 8ஆம் திகதிவரை சடலங்களை எரிப்பதற்கான முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மருத்துவமனைகளில் அதிகளவிலான சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எரியூட்டுவதற்கான தகைமை எம்மிடம் இல்லை. அதையும் மீறி நாங்கள் ஒன்று இரண்டு சடலங்களை கூடுதலாக எரியூட்டும் போது குறித்த எரியூட்டி அடிக்கடி பழுதடையக் கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது.

எனவே எரியூட்டும் தகைமையை அதிகரித்து எமக்கு இன்னுமொரு எரியூட்டியை வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். குறித்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எம்மால் எரியூட்ட முடியும்.

எங்களுக்கு எரியூட்டி வழங்கப்படாவிட்டால் கூட பரவாயில்லை. வேறு ஒரு மயானத்துக்காவது வழங்குங்கள். ஏனெனில் யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களை தகனம் செய்ய தற்பொழுது ஒரே ஒரு இடம்தான் உள்ளது. இப்போதுள்ள நிலைமையில் இது போதாது. -என்றார். (ஒ-20)





கிளிநொச்சி ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில், மறைந்த ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸுக்கு, கிளிநொச்சி ஊடக அமையத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. ஊடகவியலாளரின் திருவுருவப்படத்துக்கு விளக்கேற்றி, மலர்தூவி ஊடகவியலாளர்கள் அஞ்சலி செலுத்தினர். (4-113)



## அரசின் அறிவிப்பை மீறிய நெற்களஞ்சியசாலைக்கு சீல்

வவுனியா, செப்.4

நாட்டிலுள்ள தனியார் நெற்களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்மூடைகள் தொடர்பான விவரங்களை வழங்குமாறு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய காலத்தில் தகவல்களை வழங்க மறுத்த தனியார் நெற்களஞ்சிய சாலைக்கு நேற்றுச் சீல் வைக்கப்பட்டது.

வவுனியா கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள களஞ்சியசாலைக்கே சீல் வைக்கப்பட்டது.


நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலடைந்துவரும் நிலையில் உணவுப்பொருள்களின் விலையும் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் அரசால் விடுக்கப்பட்ட அறிவிப்பின் காலஎல்லை கடந்துள்ளதால், வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் களவிஜயத்தை மேற்கொண்டு களஞ்சியசாலைக்கு சீல் வைத்தனர்.

இதேவேளை குறித்த களஞ்சியசாலையில் உள்ள நெல்லை, நெல் சந்தைப்படுத்தும் சபைக்குப் பொறுப்பளித்து, நிர்ணய விலைக்குப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-110)

## அவசரகாலச் சட்டத்தால் சர்வாதிகார ஆட்சியா?

செல்வம் எம்.பி. விசனம்



மன்னார், செப்.4

இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இதனை வைத்து சர்வாதிகார ஆட்சியை நடைமுறைப்படுத்த விரும்புகின்றனர் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு ஏற்கனவே அதிகாரங்கள் உள்ளன. இவ்வாறு முழு அதிகாரங்களையும் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதைச் சாட்டாக வைத்து சர்வாதிகார ஆட்சியை நடத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளார்.

அதிகாரங்களை இராணுவத்துக்கு அளித்து, ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்களின் ஜனநாயகப் போராட்டங்களை முடக்கி, அவர்களைக் கைது செய்வதற்கான ஓர் அத்திபாரமாக இந்தச் சட்டம் கையில் எடுக்கப்பட்டுள்ளது.

பதுக்கி வைக்கப்பட்டுள்ள பொருள்களை மீட்பதற்கு நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை நிர்ணயம் செய்யும் நுகர்வோர் சட்டங்கள் போன்ற எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன.

அந்தச் சட்டங்களை வலுவாக்காமல் அவசரகாலச் சட்டத்தை அரசு கையிலெடுத்துள்ளமை எமது ஜனநாயக நாட்டுக்கு நல்லதல்ல.

அன்றாடம் குரல் கொடுக்கின்ற எமது மக்களின் குரல்களை நசுக்குகின்ற ஒரு சட்டமாகத்தான் இது இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும். -என்றார். (ஒ-4-213)



## கச்சான்கடைகள் சீரில்லை வரி அறவிடுவதில் மும்முரம்


வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப்.4

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயவளாகத்தில் உள்ள வர்த்தகநிலையங்கள் பல குறைபாடுகளுடன் இயங்கி வரும் நிலையில், கொரோனாத் தொற்றுக் காலத்தையும் மறந்து, பிரதேச சபையினர் வியாபார வரியை அறவீடு செய்கின்றனர் என்று வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். வியாபாரிகளுக்கு வருமானம் குறைவடைந்துள்ள போதும், மாதாந்தம் ஆயிரம் ரூபா பிரதேச சபையால் அறிவிடப்படுகின்றது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கச்சான் கடைகள் தற்போது பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கிவருகின்றன.

இந்த நிலையில் வியாபார வரியாக குத்தகைப் பணம் பெறப்படுகின்றது. தமது வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் நிரந்தர கடைகளை அமைத்துத்தர வேண்டுமென்றும், தற்கால சூழலில் வரி அறவீட்டை இடைநிறுத்தவேண்டும் என்றும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-113)



## 10 கிலோ கஞ்சாவுடன் பேசாலை வாசி கைது

மன்னார், செப்.4

10 கிலோ 780 கிராம் கேரளக்கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், மன்னார் பேசாலையில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, பேசாலை 8 ஆம் வட்டாரம் பகுதியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறையை இராணுவ மயமாக்க முயற்சிக்கும் அரசு!

## அரச தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

**கொழும்பு, செப்.4**

**ஸ்ரீலங்காவின் சுகாதாரத் துறையை முழுமையாக இராணுவ மயப்படுத்துவதற்காக சூட்சுமமான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது என்று அரச தாதியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இராணுவத்தினர் நிர்வகிக்கும் தடுப்பூசி நிலையங்களுக்கு சீரான விநியோகத்தை மேற்கொள்ளும் அரசு, சுகாதாரத் துறையால் நிர்வகிக்கப்படும் நிலையங்களுக்கு தடுப்பூசி பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.

எமது நாட்டின் சுகாதாரத்துறையை தற்போதைய அரசு குறைத்தே மதிப்பீடு செய்து வருகிறது. பைஸர் தடுப்பூசிகள் ஸ்ரீலங்காவுக்கு கொண்டுவரப்பட்டாலும் அவை தற்போது இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நல்ல விடயங்களை செயற்படுத்துகையில் இராணுவமே பொறுப்பேற்கிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதாயின் பைஸர் தடுப்பூசியே பெற்றுக்கொள்ள வேண்டும். சீனத்தடுப்பூசிகள் ஏற்றப்பட்டால் அந்நாடுகளுக்கு செல்லமுடியாது. சுகாதாரப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள தடுப்பூசிகளில் தட்டுப்பாடு காணப்படுகின்றது. மக்களுக்கு தடுப்பூசி நிலையங்களில் தடுப்பூசி அளிக்கப்படுகையில் தடுப்பூசி தட்டுப்பாடு ஏற்படுவதால் பெரும் நெருக்கடி தலைதூக்குகிறது. மோதலும் ஏற்படுகிறது.

ஆனால் இராணுவம் நிர்வகிக்கின்ற தடுப்பூசி நிலையங்களில் சரியான முறையில் தடுப்பூசி விநியோகம் மேற்கொள்ளப்படுவதால் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. 10 இலட்சம் பேருக்கு குறுகிய நாள்களில் தடுப்பூசியை சுகாதாரத் தரப்பினரால் அளிக்கமுடியும். ஆனால் தடையற்ற தடுப்பூசி விநியோகத்தை அரசு வழங்க வேண்டும். சுகாதாரப் பிரிவு பலவீனமானது என்பதை சூட்சுமமான முறையில் திரை யிட அரசாங்கம் முயற்சித்து வருகின்றது - என்றார். (எ-இ)



# ஹனா சிங்கர் பீரிஸ் நேற்றுமுன்தினம் சந்திப்பு

கொழும்பு, செப். 4

ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் தேவைகளின் பின்னணியில் மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்காக ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு அமைச்சர் பீரிஸ் நன்றிகளைத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் தற்போதைய முயற்சிகள் மற்றும் இது தொடர்பாக எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அவர் ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு விளக்கினார்.

உலக சுகாதார தாபனம் மற்றும் யுனிசெப் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பணிகளையும், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உதவிகளையும் அவர் மேலும் பாராட்டினார் என்றுள்ளது. (ம)



# தேர்தல்களைக் கண்காணிக்குமாறு இலங்கையிடம் லிபியா கோரிக்கை

கொழும்பு, செப். 4

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள தேர்தல்களைக் கண்காணிக்குமாறு லிபிய அரசாங்கம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையிலுள்ள லிபிய அரசின் தூதரகத்தின் பொறுப்பாளர் அமர் ஏ.எம்.முப்தா, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இடையிலான சந்திப்பு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. அதன்போதே லிபியப் பிரதிநிதியால் மேற்படி கோரிக்கை விடப்பட்டது.

லிபியாவின் தற்போதைய நிலைமை, குறிப்பாக மார்ச் முதல் பதவியில் இருக்கும் இடைக்கால அரசாங்கத்தின் வகிபாகம் குறித்து லிபியாவின் தூதரகப் பொறுப்பாளர் அமைச்சருக்கு விளக்கினார். 2021 டிசெம்பர் 24ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் குறித்து அவர் விளக்கமளித்ததுடன், தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்றை இலங்கையிலிருந்து அனுப்பி வைப்பது குறித்து பரிசீலிக்குமாறு கோரிக்கை விடுத்தார். (ம)

# 18 -30 வயதுக்குட்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கல் ஆரம்பம்!

கொழும்பு, செப்.4




18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்

இந்தத் தடுப்பூசித்திட்டம் மாவட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 18 முதல் 30 வயதுடைய 3.7 மில்லியன் பேருக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இந்த வயதுக் குழுவில் உள்ள முன்னணி சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட சில அத்தியாவசிய சேவைகளில் இணைக்கப்பட்டவர்களுக்கும் ஏற்கனவே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இன்னும் மூன்று வாரங்களுக்குள் முழுமையாக தடுப்பூசி போடப்படும், அதே நேரத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஒக்ரோபர் இறுதிக்குள் தடுப்பூசி வழங்கப்படும். எந்தத் தடுப்பூசியை எடுத்தாலும் அது சிறந்த தடுப்பூசி என்ற உண்மையை கருத்தில் கொண்டு முழு இலங்கையரும் தடுப்பூசியை பெற வேண்டும்- என்றார். (எ-இ)

# மைத்திரி – மஹிந்த இணைந்து கொலை செய்வதற்குச் சூழ்ச்சி

## சந்திரிகா அதிர்ச்சிக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்களின் இந்த நிகழ்ச்சி நிரலில் என்னைப் படுகொலை செய்யும் சூழ்ச்சியும் இருக்கின்றது என்று சுதந்திரக் கட்சியின் போஷகரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் வெளியிட்டுள்ள காணொலி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போது ஏற்பட்டுள்ள தலையெழுத்தைப் பார்க்கும்போது மிகவும் கவலையடைகின்றேன். கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை நினைத்தால் காலையில் படுக்கையில் இருந்து எழவும் தோன்றுவதில்லை.

கட்சிக்கு ஏற்பட்டிருக்கின்ற பின்னடைவுக்கு நானும் காரணம். என்னால் செய்யமுடியாமற்போன சில விடயங்களுக்காக வருத்தமடைகின்றேன்.

1994ஆம் ஆண்டில் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தபடியால் நாட்டுக்குச் செய்த சேவை காரணமாக தொடர்ந்தும் 23 வருடங்களாக ஆட்சியில் இருக்கக்கூடிய பலம் உருவாகியது.

எனக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டு தலைவர்களுமே கட்சியை அழித்தார்கள். அவர்களில் ஒருவர் உலகத்திலுள்ள சூதாட்டக்காரர்களை உள்நாட்டுக்கு அழைத்து வந்தார். போதைப்பொருள் கடத்தலை செய்வோரை நாடாளுமன்றத்துக்கு அழைத்தார்.

அதை எதிர்த்ததால் என்னையும் படுகொலை செய்யும் அளவுக்கு ஆலோசனை நடத்தினார்கள். என் மீது சேறுபூசினார்கள். என்றார். (எ-இ)

# தொற்றுக்குள்ளான கர்ப்பிணி பிரசவத்தின் பின்னர் மரணம்!

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த கர்ப்பிணி ஒருவர் குழந்தை பிரசவித்த பின்னர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, மாகவிட பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான தாய் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் தனது மூன்றாவது குழந்தையைச் சத்திர சிகிச்சை மூலம் பிரசவித்திருந்தார். அதன்பின்னர் தொடர் சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். அதேநேரம், [illegible] உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (எஇ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்தவர்களைக் கவனியுங்கள்!

இந்தியாவின் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கலியகாவலன் அகதி முகாமில் இருந்து தாயகம் திரும்பி, கிளிநொச்சி ஐயங்கன்குளம் கிராமத்தில் வசிக்கும் குடும்பமொன்று மீண்டும் இந்தியாவுக்குச் சென்று அகதி வாழ்வையே வாழ்ந்துவிட்டுப் போய்விடலாம் என்று எண்ணியுள்ளது. உதவித் திட்டங்கள் புறக்கணிப்பு, போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லாமை காரணமாக வறுமையின் பிடியில் அல்லலுறும் அந்தக் குடும்பம், தற்போதைய வாழ்க்கையை விட, இந்தியாவின் அகதி முகாமில் வாழ்ந்த வாழ்க்கையே பரவாயில்லை என்று எண்ணும் அளவுக்கு அமைந்துள்ளன இங்குள்ள நடைமுறைகள்.


இந்த விவகாரம் இந்த ஒரேயொரு குடும்பத்தை மையப்படுத்திய விடயம் இல்லை. அவர்கள் ஒரு சமூகத்தை ஒரு மக்கள்குழுமத்தைப்பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்ற அடிப்படை யதார்த்தத்தை அனைவரும் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அகதிகளாக இந்தியாவின் முகாம்களில் வசித்துவரும் ஈழத் தமிழர்கள் தாயகம் திரும்புவதில் உள்ள இடர்பாடுகளுடன் நேரடித் தொடர்புடைய விடயம் இது.

தமிழகத்தின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் முகாமுக்கான பெயர் மாற்றம், அவர்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை அறிவித்த பின்னர் அமைச்சர் நாமல் ராஜபக்ச சிலபல விடயங்களைத் தெரிவித்தார். அதில் ஒன்று, 'ஈழத் தமிழர்கள் மீண்டும் தாயகம் திரும்பினால் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படும். வீடு அமைப்பு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்' என்பதாக அமைந்தது. கேள்வி என்னவென்றால், கிளிநொச்சியில் உள்ள மேற்படி குடும்பத்தில் அவலநிலைதான் இலங்கை அரசு ஏற்படுத்திக் கொடுக்கப்போகும் வசதி வாய்ப்பா?.

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர்களை மீண்டும் தாயகம் கொண்டுவரவேண்டும் என்ற அரசின் நோக்கம் நல்லதுதான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், வெறும் வாய்ச் சவடால்களால் இதைச் சாதித்துவிடமுடியாது. இதயசுத்தியுடன் தூய்மையான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டாலேயே இந்த மீள்குடியேற்றம் என்பது சாத்தியம். இந்தியாவில் இருந்து மீளக் குடியேறிய மக்களுக்கு சிறந்த வீடுகளை வழங்கி, வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி, இலங்கையின் மக்கள் என்ற ஒற்றுமைப்பாட்டில் ஜனநாயக உரிமைகளை தார்மீகக் கடமையுடன் வழங்கினால் இவ்வாறாக வலிந்து அழைக்கும் தேவை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்காது. மக்கள் தாமாகவே முன்வந்து தமது சொந்த இடங்களில் குடியேறுவார்கள்.

தரமற்ற பொருளுக்குத்தான் அளவுக்கு அதிகமான விளம்பரம் தேவை. அதுபோன்று சீரற்ற செயற்பாடுகளுக்குத்தான் அளவுக்கு அதிகமான வாய்ச்சவடால்கள் தேவைப்படுகின்றன. எனவே சீரான செயற்பாடுகளை நல்ல எண்ணத்துடன் முன்னெடுத்தால் இவ்வாறான அறிக்கைகள் அறிவிப்புக்கள் தேவைப்படாது என்ற இயல்நிலையை அரசு முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

குடியேறிய மக்களுக்கு நல்ல வீடுகளை வழங்குங்கள், காணிகளை விடுவியுங்கள், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துங்கள், பொருளாதாரத்தை மேம்படுத்துங்கள் மக்கள் தாமாகவே வருவார்கள். அகதி வாழ்வை எவரும் தேர்ந்தெடுப்பதில்லை, அது அவர்களின் விருப்பமும் அல்ல.




# கோத்தாவின் பிரகடனம்மீது நாளை மறுதினம் விவாதம்

**கொழும்பு, செப். 4**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் கடந்த 30ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகால சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான பிரகடனத்தை நாளை மறுதினம் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை விவாதித்து சபையில் அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2வது பிரிவால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவதற்காக இந்த அவசரகால சட்ட ஒழுங்குவிதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அத்துடன், தற்பொழுது நிலவும் கொரோனாச் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு அடுத்த வாரத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை நாளை மறுதினம் திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் மாத்திரம் நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

(ஒ.44)

# அடக்குமுறை ஆட்சிக்காகவா அவசரகாலநிலை பிரகடனம்?

## முற்றாக மறுக்கிறது அரசு

கொழும்பு, செப். 4

போராட்டங்களை ஒடுக்கவும், சமூக ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கவும், அடக்குமுறையான ஆட்சியை முன்னெடுப்பதற்காகவுமே அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அரசு முற்றாக நிராகரித்துள்ளது. இது தொடர்பில் விளக்கமளித்த ஆளுங்கூட்டணியின் தலைமைக்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்திராராச்சி கூறியவை வருமாறு,

நல்லாட்சி போன்று மக்களை ஆணைக்கு புறம்பாக அடக்குமுறை ஆட்சியை முன்னெடுக்கும் தரப்பு எமது அரசு கிடையாது. மக்கள் எம்.சி.சி. உடன்படிக்கை வேண்டாம்என்றனர், அதனை இரத்துச் செய்வோம். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்திலும் எதிர்ப்புகள் வலுத்தன. அதனை நிறுத்தினோம். தன்னிச்சையாக செயற்படாமல் மக்களின் கருத்துகளையும் செவிமடுத்தே அரசு பயணிக்கின்றது.

அத்துடன், எதிரணி உறுப்பினர்களை வேட்டையாடவும், சமூக ஊடகங்களை ஒடுக்கவுமே அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது எனக்குற்றஞ்சாட்டுகின்றனர். குறிப்பாக நாட்டில் பிரச்சினைகள் வலுப்பெற்றால் ஆட்சி தாமாக தனது கைக்கு வந்துவிடும் என்ற நினைப்பிலேயே அவசரகால சட்டம் வேண்டாம் என எதிர்க்கட்சித்தலைவரும் கருத்து வெளியிடுன்றார்.



கடந்த காலங்களில் 800 வரையான போராட்டங்கள் இடம்பெற்றன. எந்தவொரு போராட்டத்தையும் வன்முறை ஊடாக அரசு கட்டுப்படுத்தவில்லை. தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறியவர்களே சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டனர். ஆக அடக்குமுறைகளை கையாள்வதற்காக அவசரகால ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டிய தேவை எமது அரசுக்கு கிடையாது - என்றார் ஜகத் குமார. (ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலங்களை தகனம் செய்ய முல்லையில் இடம் ஒதுக்கீடு

முல்லைத்தீவு, செப்.4

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலங்களை தகனம் செய்வதற்கான இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.**



மாவட்டத்தில் தொடர்ச்சியாக கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில், மருத்துவமனையில் உடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

வவுனியாவில் உள்ள எரிவாயு தகனமேடையும் பழுதடைந்துள்ளது.

இதனையடுத்து மாவட்டச் செயலர் தலைமையில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர், கரைதுறைப் பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் வன வளத்திணைக்கள அதிகாரிகள் இணைந்து முதற்கட்டமாக கள ஆய்வை மேற்கொண்டு இடத்தை அடையாளப்படுத்தினர்.

தண்ணீரூற்று நெடுங்கேணி வீதியில் கயட்டைக் காட்டுக்கு அருகில் வனவளத்திணைக்களத்துக்குச் சொந்தமான காட்டுப்பகுதியில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு அருகில் மின்சார வசதி இருப்பதால், உடலங்களை எரிப்பதற்கு ஏற்றவகையில் மின்சார எரிவாயுத் தகனமேடை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-19)

## வவு. மருத்துவமனைக்குள் ஊடுருவியது கொரோனா

வவுனியா, செப்.4

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துவரும் நிலையில், வவுனியா பொது மருத்துவமனையில் பணிபுரியும், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உதவியாளர்கள் பலர் தொடர்ச்சியாக கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

வவுனியா நகரசபை சுகாதாரப் பரிசோதகருக்கும் மற்றும் நோயாளர்காவு வண்டிச் சாரதிக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சுகாதாரப் பரிசோதகர் இரண்டாவது முறையாக கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சுகாதாரத் துறைசார்ந்தவர்களிடையே தொற்று அதிகரித்துச் செல்வதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். (ஒ-4-110)

## வீட்டில் உயிரிழந்தவரின் மகனுக்குக் கொரோனா

முல்லைத்தீவு, செப்.4

வீட்டில் திடீரென உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் மகனுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரே திடீரென உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர் வீட்டில் திடீரென உயிரிழந்தமையால், அவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

உயிரிழந்த குடும்பஸ்தரின் மகன் மருத்துவமனைக்குச் சென்ற நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ஒ-4-19)

## அருவி ஆற்றில் தொடரும் மணல் அகழ்வால் பாதிப்பு

### ஆளுநருக்கு கடிதம்

மன்னார், செப்.4

மன்னார் அருவி ஆற்றில் மணல் அகழ்வு தொடர்வதால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறிப்பிட்டு, வடக்கு மாகாண ஆளுநருக்கு, நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இங்கு மணல் அகழ்வு தொடர்வதால், கடல் நீர் உள்வாங்கப்பட்டு ஆற்றங்கரையை அண்டியுள்ள பல கிராமங்களில் நிலத்தடி நீர் உவராகியுள்ளது.

இதனால் பரிகாரிகண்டல் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஆத்திமோட்டை, அடையாச்சிக்குளம் போன்ற பகுதிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அருவியாற்றின் பல பகுதிகளில் மணல் அகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது மணல் அகழ்வுகள் இடம்பெறும் பகுதிகளிலும் தடையை விதித்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-213)



## வவுனியா மருத்துவமனைக்கு உயிர்காக்கும் இயந்திரம்

வவுனியா, செப்.4

வவுனியா பொதுமருத்துவமனையின் கொரோனா சிகிச்சை நிலையத்துக்குத் தேவைப்படும் உயிர்காக்கும் இயந்திரமொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

லண்டன் பாக்கியம் அறக்கட்டளை அமைப்பின் ஊடாக, வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளரிடம் இயந்திரம் கையளிக்கப்பட்டது. இதன்போது மருத்துவர் மதுரகன், பாக்கியம் அறக்கட்டளை உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர். (ஒ-4-110)

## திடீரென தீப்பற்றிய வீடு பல பொருள்கள் தீக்கிரை

யாழ்ப்பாணம், செப்.4

வீடு திடீரென தீப்பற்றியதால், பெறுமதியான பல பொருள்கள் தீக்கிரையாகின.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஆரியகுளத்துக்கு அண்மையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வீட்டார் தமது அறையில் ஊதுபத்தியைக் கொளுத்தி வைத்த பின்னர், வீட்டுக்கு வெளியே சென்ற போது தீ பரவியுள்ளது.

அயலவர்களின் உதவியுடன், மாநகர சபை தீயணைக்கும் படையினர் தீயைக் கட்டுப்படுத்தினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்ப்பாணம் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டனர்.

தீ விபத்தால் வீட்டில் வைக்கப்பட்டிருந்த பல பெறுமதியான பொருள்கள் தீக்கிரையாகின எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-20)



## மக்களின் காணிகளை அபகரித்து வனவளத்திணைக்களம் அடாவடி

கிளிநொச்சி, செப்.4

கிளிநொச்சி ஜெயபுரம் வடக்கின் திக்குவில் பகுதியில், முப்பதாண்டுகளுக்கு மேலாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் வனவளத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பகுதியில் தற்போது 15 வரையான குடும்பங்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பிட்ட காணிகளை அபகரிக்கும் நோக்குடன் வனவளத் திணைக்களத்தினர், பற்றைகளைத் துப்புரவு செய்துவருகின்றனர்.

இது தொடர்பாக திக்குவில் மக்கள், ஜெயபுரம் கிராம அலுவலர், பூநகரி பிரதேச செயலாளர் ஆகியோருக்கு முறைப்பாடுகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏ-32 சாலைக்கு அருகில் பாலைப் பழங்கள் பிடுங்கிக்கொண்டிருந்த அப்பாவி மக்களின் நான்கு கத்திகளைப் பிடுங்கிச் சென்று வனவளத் திணைக்களத்தினர் அடாத்தான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியை இலக்குவைத்து, மரக்கன்றுகளை நடுகை செய்யவுள்ளோம் என்ற போர்வையில் காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-4-13)

## இளைஞர் கழகத்தால் இன்று குருதித்தானம்

கிளிநொச்சி, செப்.4

பூநகரி இளைஞர் கழக சம்மேளனத்தால் இன்று குருதித்தானம் வழங்கப்படவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மத்திய குருதி வங்கி ஆகியன இணைந்து நாட்டில் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் குருதித்தானத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இதில் 4 வருடமாக பூநகரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் குருதித்தானம் வழங்கப்பட்டு வருகிறது.

பூநகரி மருத்துவமனையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதேச ரீதியில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்கள் மற்றும் ஏனைய இளைஞர்கள் அனைவரும் பங்குபற்ற முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி பரிஸில் கவனவீர்ப்பு!

பரிஸ், செப்.4

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கோரி பிரான்ஸ், பரிஸ் நகரில் உள்ள மனித உரிமைச் சதுக்கத்தில் கவனவீர்ப்பு நடத்தப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசும், தமிழீழ மக்கள் பேரவையும் இணைந்து, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினமான கடந்த 30ஆம் திகதி இந்த கவனவீர்ப்பை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தக் கவனவீர்ப்பில் பலர் கலந்துகொண்டதுடன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். (எ-இ)



கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஒழுங்குபடுத்தலில் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் கஜன், உறுப்பினர் ரமேஸ், முகமாலை அமைப்பாளர் சுதர்சன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நாதன் ஆகியோர் பொதிகளை வழங்கினர். (ஒ-4-13)

# போக்குவரத்து வசதிகள் இல்லை தடுப்பூசிக்கு மக்கள் காத்திருப்பு

முல்லைத்தீவு.செப்.4

கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றவர்கள், போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் இரண்டாம் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயத்தில் தடுப்பூசி பெற்றவர்களே இந்த நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.

அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலத்தில் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்குத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் கடந்த மாதம் ஏற்றப்பட்டது.

தற்போது இரண்டாவது டோஸுக்காக அவர்கள் காத்திருக்கின்றனர். எனவே அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ.ஹஜிதரன் தெரிவிக்கையில்,

கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் குறிப்பிட்ட மக்களுக்கு கடந்த மாதம், அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயத்தில் ஏற்றப்பட்டது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் அவர்கள் வேறு இடங்களுக்கு தடுப்பூசி ஏற்றச் செல்லவில்லை. தற்போது இரண்டாவது டோஸையும் . அம்பலவன்பொக்கணை மகாவித்தியாலயத்தில் வைத்து ஏற்றுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

செம்மண்குன்று, புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டியுள்ளது -என்றார். (ஒ-4-13)

# வவுனியா மருத்துவமனையில் மூன்றாவது சிகிச்சை விடுதி

வவுனியா,செப்.4

**கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில், அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக, வவுனியா மருத்துவமனையில் மூன்றாவது விடுதியும் திறக்கப்பட்டுள்ளது.**

வவுனியா மருத்துவமனையில் தொற்றாளர்களைப் பராமரிப்பதற்காக 100 படுக்கைகளைக் கொண்ட 3 விடுதிகளும், 15 படுக்கைகளைக் கொண்ட கர்ப்பிணித் தாய்மாருக்கான விசேட விடுதியும், 6 படுக்கைகளைக் கொண்ட அதிதீவிர சிகிச்சைப் பிரிவும், 2 படுக்கைகளைக் கொண்ட சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்புப் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதால், கொரோனா அல்லாத பிற நோய்களுக்கான சிகிச்சை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஒ-4-110)

# கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் ஐவர்மெக்டினைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

## மருத்துவத்துறை எச்சரிக்கை

கொழும்பு, செப். 4

கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்கள் ஐவர்மெக்டின் மருந்து பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என மக்களுக்கு அவசர அறிவிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என்று சுட்டிக்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும், ஐவர்மெக்டின் கொரோனா வைரஸுக்குப் பயனளிக்கக் கூடியது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லை.

இதனால் அந்த மருந்து பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும். கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் சிலர் ஐவர்மெக்டினை பரிந்துரை செய்கின்றனர். உள்நாட்டில் இந்த மருந்து குறித்து ஆராய்ந்து வருகின்றோம். ஆனால் இன்னமும் நாங்கள் இந்த மருந்தினைப் பரிந்துரைக்கவில்லை - என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர் என்று அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# மாங்குளம் நகரில் தேங்கும் வெள்ளம்

வடிகால்களை அமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.4

முல்லைத்தீவு மாங்குளம் நகரில் பெரும் மழையின்போது வெள்ளம் வடிந்தோடுவதற்கான வடிகால்கள் அமைக்கப்படாத காரணத்தால், நகருக்குள் வெள்ளம் தேங்கி நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாங்குளம் நகரச் சூழலில் உள்ள மதகுவைத்தகுளம், முறியாக்குளம், ஆசைப்பிள்ளைக்குளம் என்பன மழை காலத்தில் நிரம்பி, மாங்குளம் நகரத்தைக் கடந்து கனகராயன் ஆற்றில் கலப்பது வழமை.

தற்போது ரயில் வீதிகள், ஏ9 வீதிப் புனரமைப்பின்போது, பெரிய பாலங்கள் இருந்த இடத்தில் சிறிய பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சில பாலங்கள் மூடப்பட்டுள்ளன.

இதனால் மழை காலத்தில் மாங்குளம் நகரத்தில் வெள்ளம் தேங்கி நிற்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

சந்தை, ரயில் நிலையம் ஆகிய இடங்களில் சுமார் 7 அடி வரை வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

எனவே பொருத்தமான இடங்களில் பாலங்கள், மதகுகளை அமைத்து, வெள்ளம் வடிந்தோடுவதற்கான வடிகால்களை அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாங்குளம் நகர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-13)



# கொரோனாவை கட்டுப்படுத்த லயன்ஸ் கழகம் கைகொடுப்பு

கிளிநொச்சி,செப்.4

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் கொரோனாத் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கு, லயன்ஸ் கழகம் உதவி வழங்கியுள்ளது.

கிளி பீப்பிள் மற்றும் கிளிநொச்சி சிற்றி லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இந்த உதவியை வழங்கின.

அதற்கமைவாக விழிப்புணர்வுப் பணிக்காக ஒரு தொகை துண்டுப்பிரசுரங்கள் மற்றும் முகக்கவசங்கள் கையளிக்கப்பட்டன. லயன்ஸ் கழகத்தின் பிராந்தியத் தலைவர் ஜெயசுதர்சன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனிடம் அவற்றைக் கையளித்தார்.

இவை தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு என்பது வதந்தி

## தேசிய மருந்தாக்கல் ஆணைக்குழுவின் தலைவர் பிரசன்ன விளக்கம்

**கொழும்பு, செப். 4**

**கொரோனாத் தொற்று நிலைமையால் நாடு நெருக்கடியைச் சந்தித்துள்ள போதும், மக்களுக்கான அத்தியாவசிய மற்றும் மிக முக்கியமான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று தேசிய மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் விசேட மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் பொதுவாக 800 தொடக்கம் ஆயிரத்து 200 மருந்துகள் வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தியாவசிய மருந்துகள் தொடர்ச்சியாக இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுக்குத் தடை விதிக்கப்படவில்லை. பயன்படுத்தப்படும் ஆயிரத்து 200 மருந்துகளில் 25 மருந்துகளுக்கு மட்டுமே தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த மருந்துகள் கூட அத்தியாவசியமானவை அல்ல. அவற்றுக்குப் பதிலாக வேறு மருந்துகளைப் பயன்படுத்த முடியும். அவை எம்மிடம் கைவசம் உள்ளன. மருந்துகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றபோதும், அவ்வாறான விலையேற்றங்கள் எவையும் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. 2020ஆம் ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்ட விலைப்பட்டியலே தற்போதும் கடைப்பிடிக்கப்படுகின்றது - என்றார். (எ-இ)

# முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்க கூட்டமைப்பினர் முன்வரவேண்டும்

***ஐக்கிய காங்கிரஸ் கோரிக்கை***

கொழும்பு, செப். 4



வடமாகாணத்தில் மீளக் குடியேற முடியாத முஸ்லிம்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதவி செய்ய முன்வர வேண்டும். முஸ்லிம்களிடம் இருந்து புலிகள் அபகரித்த காணிகள், சொத்துக்களுக்கு உரிய இழப்பீடு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் வடமாகாண முஸ்லிம்களை மொத்தமாக வெளியேற்றியமை நிச்சயம் இனச்சுத்திகரிப்பு எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். அதுமாத்திரமின்றி அது ஒரு துன்பியல் நிகழ்வு என புலிகளும் அந்நாள்களில் அறிக்கையிட்டு சமாளித்திருந்தார்கள்.

இப்போது புலிகள் இல்லை. புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. புலிகளால் விரட்டப்பட்ட வட மாகாண முஸ்லிம்களை ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச மீண்டும் அங்கு குடியேற்றினார். ஆனால் அந்தக் குடியேற்றத்துக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவையாவது வழங்கியதா?

வடமாகாண முஸ்லிம்கள், அனைத்து சொத்துக்களும் கொள்ளையிடப்பட்டதன் பின்னரே வெளியேற்றப்பட்டனர். அவர்கள் மீள் குடியேறும் போது சிலருக்காவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வீடுகள் கட்டிக் கொடுத்தனரா? முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துக்கு உதவாவிட்டாலும் பரவாயில்லை, இன்று வரை தடை போட்டுக்கொண்டிருப்பது தமிழ் கூட்டமைப்பின் இனவாதத்தைக் காட்டுகிறது. கடந்த பல வருடங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாணத்தை ஆட்சி செய்தும் வடமாகாண முஸ்லிம்களின் கௌரவமான மீள் குடியேற்றத்துக்கு உதவவில்லை - என்றார். (ம)

# நீர்வீழ்ச்சியை பின்னணியாக்கி இளம் ஜோடி ஆபாச காணொலி

## விசாரணைகளை ஆரம்பித்தது குற்றப் புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, செப்.4

பலாங்கொடவில் உள்ள பஹன் துடாவ நீர்வீழ்ச்சியைப் பின்னணியாகக் கொண்டு, அங்கு படம்பிடிக்கப்பட்ட ஆபாசக் காணொலி இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

"தம்சக் மன்றம்" என்ற அமைப்பின் தலைவர் பஸ்ஸரமுல்லே தயாவங்க தேரர், இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் எழுத்துமூலம் முறைப்பாடு செய்துள்ள நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுற்றுலாப் பிரயாணிகளை அதிகம் கவரும் இடங்களில் இளம் ஜோடி ஒன்று இவ்வாறு ஆபாச காணொலிகளைத் தயாரித்து இணையத்தில் பதிவேற்றுவதால் இலங்கையின் கலாசார விழுமியங்கள் தொடர்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவரே இந்தக் காணொலியைப் பதிவேற்றியுள்ளார் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறிய பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்தனர். (எ-இ)

# சமாளிக்க முயன்ற பீரிஸ் சந்திக்க மறுத்த கர்தினால்

கொழும்பு, செப். 4

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று அறிய முடிகின்றது. சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்வரை சந்திப்புக்குச் சாத்தியமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார் என்று நீர்கொழும்பு புனித மரியாள் தேவாலயத்தின் பங்குத்தந்தை காமினி பெர்னாண்டோ அடிகள் தெரிவித்தார்.

சந்திப்பு ஒன்றுக்குக் கோரிக்கை விடுத்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதற்குப் பதிலளித்துள்ள மல்கம் ரஞ்சித் ஆண்டகை, சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலே சந்திப்புக்குச் சாத்தியம் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நடத்தப்பட வேண்டும் என்று கர்தினால் எழுத்து மூலமாக வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

கத்தோலிக்க சமூகம் மற்றும் பொது மக்களின் நம்பிக்கையைப் பெற, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கர்தினால் கூறியுள்ளார்.

தாக்குதல் தொடர்பாக பொலிஸார் உட்பட ஊடகங்களில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் தாக்குதல்கள் மீதான விசாரணையில் நம்பிக்கையை உருவாக்கவில்லை, மாறாகச் சிதைக்கும் விதமாகவே உள்ளன என்றும் கர்தினால் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# இரண்டு மாதங்களுக்குள் 12 மில்லியன் தடுப்பூசிகள்!

கொழும்பு, செப்.4

இரு மாதங்களுக்குள் இலங்கைக்கு மேலும் 12 மில்லியன் கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

8 மில்லியன் சினோஃபார்ம் தடுப்பூசிகளும், 4 மில்லியன் பைசர் தடுப்பூசிகளும் இலங்கைக்குக் கிடைக்கும் என்று விசேட மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அதேவேளை, இதுவரை இலங்கைக்கு 22 மில்லியன் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# கென்யாவின் ஆடைத் தொழிற்சாலைக்கு இலங்கைத் தூதுவர் கணநாதன் விஜயம்

கொழும்பு, செப். 4

கென்யாவில் உள்ள ஹெலா ஆடைத் தொழிற்சாலைக்கு, இலங்கைத் தூதுவர் வேலுப்பிள்ளை கணநாதன் அண்மையில் பயணம் மேற்கொண்டார்.

ஹெலா நிறுவனமானது, இலங்கை, எத்தியோப்பியா, எகிப்து மற்றும் கென்யா முழுவதும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள இலங்கைக்குச் சொந்தமான நெறிமுறை மற்றும் நிலையான ஆடை உற்பத்தியாளராகும். கென்யாவின் ஆடை உற்பத்தியில் முன்னோடியாக உள்ள ஹெலா ஆடை, கென்யாவின் மொத்த ஆடை ஏற்றுமதியில் 15 வீதமான பங்களிப்புடன் கென்யாவின் மிகப்பெரிய உள்ளாடை உற்பத்தியாளராக முன்னேறியுள்ளது. உள்ளாடைகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முகமூடிகள் ஆகிய இரண்டு உற்பத்தி அலகுகளை நைரோபியில் ஹெலா ஆடை கொண்டுள்ளது.

மேலும் கென்யாவில் ஹெலா முதலீடுகள் 64 இலங்கையர்களுக்கும் 4600 கென்யர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளன. இது கென்யாவில் ஆடை உற்பத்தி அலகை நிறுவும் பணியில் உள்ளது.

கென்யாவில் உள்ள ஹெலா ஆடைகள் ஆண்டுக்கு 130 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு அனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்தரித்தலில் செல்வாக்குச் செலுத்தும்



## வாழ்க்கைமுறை மாற்றங்களும் நிகழ்வுகளும்

**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம்,யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

இன்றைய காலகட்டத்தில் நமது வாழ்க்கைமுறையில் ஏற்படும் மாற்றங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கருத்தங்கல் தாமதமடைவதற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்கேற்கின்றது. இவற்றில் ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கங்கள், உடற்பயிற்சியின்மை, அதிக உடல் நிறை அதிகரிப்பு, மன அழுத்தம் மற்றும் மது, சிகரெட் , போதைப்பொருள் பாவனை முதலியன முக்கிய பங்கு வகிக்கின்றன. மேற்குறிப்பிட்ட வாழ்க்கைமுறை மாற்றங்கள் எவ்வாறு கருத்தங்கலில் தாக்கம் விளைவிக்கின்றன என்பதையும் அதற்கான தீர்வுகளையும் விரிவாகப் பார்ப்போம்.

ஆண், பெண் இருபாலாரிடமும் காணப்படுகின்ற ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கமுறைகள் கருத்தரித்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த உணவுப்பழக்கவழக்கங்கள் மூலம் அதிகப்படியான உடல்நிறை அதிகரிப்பு கருத்தங்கலில் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் ; இவ்வாறான ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள் ,தொற்றாநோய்களான சலரோகம்,குருதி அழுத்தம், மாரடைப்பு போன்றன இளவயதிலேயே ஏற்படக் காரணமாவதுடன், பெண்களின் கர்ப்பகாலத்திலும் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி, பிள்ளைப் பேற்றினையும் பாதிக்கின்றது. அதிகப்படியான காபோவைதரேற் மற்றும் வெல்லம் நிறைந்த உணவுகள் (உ+ம் : அரிசி, உருளைக்கிழங்கு, இனிப்பு வகைகள்), சிலவகையான கொழுப்பு அடங்கிய உணவுகள் (பதனிட்ட உலர்ந்த உணவுகள்) பதப்படுத்தப்பட்ட இறைச்சி, மீன் வகைகள் (Sausages, meatballs) உடல்நிறையைக் கூட்டுவதுடன் தொற்றாநோய்கள் ஏற்படுவதற்குப் பெரிதும் பங்காற்றுகின்றன.

எனவே, இவ்வாறான உணவுப் பழக்கங்களைத் தவிர்ப்பதுடன் ,அளவுடன் காபோவைதரேற், வெல்லம் மற்றும் கொழுப்பு அடங்கிய உணவுகளை உண்ணவேண்டும். புரதச்சத்துள்ள உணவுகள் (தாவரமற்றும் விலங்குப் புரதம்) விற்றமின்,மற்றும் கனியுப்பு அடங்கிய பழவகைகள் ,மரக்கறி உணவுகள் என்பனவற்றை அளவாக உட்கொள்ளும் போது உடல் ஆரோக்கியம் அதிகரிப்பதுடன் உடல்நிறை அதிகரிக்காமல் பேணவும் முடியும்.

உடல்நிறை அதிகரிப்பானது ஆண், பெண் இருபாலாரிடையும் அதிகரித்துவரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம் ,மற்றும் போதியளவு உடற்பயிற்சியின்மை ஆகியவற்றை முக்கியமான காரணங்களாகக் குறிப்பிடலாம். ஒருவருடைய உடல்நிறை மற்றும் அவருடைய உயரத்தைக் கொண்டு உடற்திணிவுச்சுட்டி (BMI ) கணிக்கப்படுகிறது. இந்த உடற்திணிவுச் சுட்டியானது ஆண், பெண் இருவருக்கும் சரியாக இருக்கவேண்டிய உடல்நிறையை அவர்களின் உயரத்துக்கு ஏற்றவாறு குறிப்பிடுகின்றது.

அதிகப்படியான உடல்நிறை அதிகரிப்பானது இருபாலாரிடமும் கருத்தரித்தல் தாமதமடைவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பெண்களில் உடற்பருமன் அதிகரிப்பானது முட்டை விருத்தியடைதல் ,மற்றும் சூல் கொள்ளலில் பங்குகொள்ளும் ஹோமோன்களின் சமநிலையைக் குழப்புகின்றது. இதனால் மாதவிடாய்ச்சக்கரம் ஒழுங்கற்றுப் போதல் சூல் கொள்ளல் தடைப்படல் மற்றும் சூல் கொள்ளலின் போது உருவாக்கப்படும் முட்டைகள் தரம் குறைவானதாகக் காணப்படுதல் போன்ற பிரச்சினைகள் எழுகின்றன. ஆண்களில் இதேபோன்று விந்துருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஹோமோன்களின் சமநிலையைக் குழப்புவதால் தரமான விந்துக்களின் உற்பத்தியும், முதிர்ச்சியும் பாதிப்படைகின்றன. மேலும் தொற்றாநோய்களினால் குறைந்தவயதில் பாதிக்கப்படுவதற்கும் உடல்நிறை அதிகரிப்பு முக்கிய காரணமாக இருக்கின்றது.




எனவே உடல்நிறையை உரிய மட்டத்தில் பேணுவதன் மூலம், குறிப்பாக உடல் திணிவுச் சுட்டியை 25 ஐ விடக் குறைவாக வைத்திருப்பதனால் நமது உடலை ஆரோக்கியமாகப் பேண முடியும். உடல் நிறையைக் குறைப்ப தற்கு முக்கியமான இருவழிகளாகக் கருதப்படுபவை உடற்பயிற்சியும் , ஆரோக்கியமான உணவுப் பழக்கமும் ஆகும். இவற்றைக் கிரமமாக கடைப்பிடிக்கும் போது உடல் நிறை அதிகரிப்பு கட்டுப்படுத்தப்படுவதுடன் உரியநேரத்தில் கருத்தரிப்பதற்கும் உதவுகின்றது.

மனஅழுத்தமும் அது ஏற்படுத்துகின்ற உடல் உளப்பாதிப்புக்களும் ஆண், பெண் இருபாலாரிடமும் தற்போது அதிகரித்து வருகின்ற ஒரு பிரச்சினையா கும். இதற்கு, வீட்டில், வேலைத்தளத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், தற்போது ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்படுகின்றபிரச்சினைகள் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம் . இதற்கு மேலதிகமாக, குழந்தை யில்லாத் தம்பதியினரிடையே சமூகம் பார்க்கும் பார்வை, அழுத்தம் கேள்விகள் மற்றும் கேலிப் பேச்சுகளும் முக்கிய காரணிகள். மன அழுத்தமானது நேரடியாகவும், மறைமுகமாகவும் கருத்தரித்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனஅழுத்தம் அதிகரிக்கும் போது சுரக்கப்ப டும் ஹோமோன்கள் உடலில் சூல் கொள்ளல் மற்றும் விந்து உருவாக்கச் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் ஹோமோன்களின் சமனிலையையும், தொழிற்பாட்டையும் குழப்புவதனால் சூல் கொள்ளல் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் மனஅழுத்தமான தம்பதியினரிடையே உடல் உறவில் நாட்டமின்மை ஏற்படுகின்றது. மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு,சிலர் மது,சிகரெட், போதைப்பொருள் பாவனை மற்றும் அதிகளவிலான உணவுப் பழக்கம் என்பவற்றை பழகிக் கொள்கிறார்கள். இவையும் உடல் ஆரோக்கியத்தைப் பாதிப்பதுடன், கருத்தரித்தலிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.


மனஅழுத்தப்பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கு பலவழிமுறைகள் உள்ளன. குறிப்பாக உங்களிடம் காணப்படுகின்ற பிரச்சினைகள் (குழந்தையின்மையால் ஏற்படும் மனஅழுத்தங்கள்) உங்கள் கணவரிடமோ , மனைவியிடமோ பகிர்ந்துகொள்ள வேண்டும். இதற்கான தீர்வுகளை, சிகிச்சை முறைகளை இருவரும் கதைத்து ஆலோசித்து சரியான இடங்களிற் பெற்றுக் கொள்ளவேண்டும்.


மேலும் தியானம், யோகாப்பயிற்சி, சமயவழிபாடுகள் என்பன மனஆறுதலையும் அமைதியையும் தரவல்லவை. இவ்வாறான அடிப்படைமுறைகள் மூலமும் மனஅழுத்தத்தைக் குறைக்க முடியாவிடின் உளவள ஆலோசனையை பெற்றுக் கொள்வது சிறந்தது. எனவே வாழ்க்கைமுறை மாற்றங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கருத்தரித்தலில் இருபாலாரிடமும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதற்கான தீர்வுகளைச் சரியான நேரத்தில் பெற்றுக் கொள்வதன் மூலம் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதத்தைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

4



### குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்




**BMI (அட்டவணை)**

| | |
|---|---|
| < 18.5 | குறைவான உடல் நிறை |
| 18.5- 24.5 | சரியான உடல் நிறை |
| 25 29.5 | அதிகளவான உடல் நிறை |
| >30 | மிக அதிக உடல் நிறை (obesity) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** உதவிகள் ஓரளவு கிடைக்கும். சுப விசேஷங்கள் உறுதியாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். பதவி உயர்வு உண்டாகும் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் செலவு ஏற்படும்.

**இடபம்:** மேலதிகாரிகள் மூலம் உங்களுக்கு உதவிகள் கிடைக்கும். பணத் தேவை ஒன்று உடனடியாகப் பூர்த்தியாகும். பணியில் இருந்து வந்த அழுத்தங்கள் படிப்படியாக விலகும்.

**மிதுனம்:** எதிர்பாராத நன்மை ஒன்றை அடைய வாய்ப்பு உள்ளது. நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். வாழ்வில் முன்னேறுவதற்கான வாய்ப்பு ஒன்று ஏற்படும்.

**கடகம்:** உணவில் கவனம் தேவை. பெண்களுக்கு உதவி ஒன்று கிடைக்கும். தாய்வழி உறவுகளின் அன்பும், பாசமும் கிடைக்கப் பெறுவீர்கள். பிரச்சினை ஒன்று தீர்க்கப்படும். பேச்சினால் நன்மை வரும்.

**சிம்மம்:** புதிய முயற்சி ஒன்றைக் கையாண்டு வெற்றி பெறுவீர்கள். முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். ஆன்மிக ஈடுபாடு வரும். கருணைச் செயல்களால் மற்றவர்களின் மதிப்பைப் பெறுவீர்கள்.

**கன்னி:** உறுதியுடன் செயற்பட்டு வெற்றியை நெருங்குவீர்கள். சுபச் செய்தி ஒன்று கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட கால முயற்சி ஒன்று சாதகமாக முடியும்.

**துலாம்:** பல காலம் எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். பணியாளர்கள் பொறுமையாக இருப்பது மிகவும் நல்லது. விஷயம் சரியாக நடக்கவில்லை என்ற கவலை வரும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் இடையே புரிதல் அதிகரிக்கும். மகிழ்ச்சி கூடும். எதிலும் கவனம் தேவை. கோபத்தை கட்டுப்படுத்தவேண்டும். வெற்றி இலக்கை நெருங்குவீர்கள்.

**தனுசு:** எந்த ஒரு விஷயத்திலும் அலட்சியமாக இருக்கவேண்டாம். சற்றும் எதிர்பாராத நபர் ஒருவர் மூலம் ஆதாயம் கிடைக்கும். மன அமைதி சீராக இருக்கும்.

**மகரம்:** விடாமுயற்சி உள்ளோருக்கு அனுகூலமான நாள். வாழ்க்கைத் துணையின் போக்கில் நல்ல மாறுதல் உண்டு. குழந்தைகளின் பிடிவாத நிலை மாறும். நட்பு வட்டம் விரியும்.

**கும்பம்:** உறவினர்கள் மூலம் நலம் தரும் செய்தி கிடைக்கும். தந்தையின் ஆரோக்கியம் மேம்படும். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**மீனம்:** பணியாளர்கள் சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். மனநிம்மதி உண்டு. சோம்பலைக் கைவிடுவது நல்லது. பரபரப்பாகப் பணி செய்வீர்கள். உங்களின் வருமானம் உயரும்.



# விஜய் சேதுபதிக்கு ஜோடியாக 3 சீரியல் நாயகிகள்




நடிகர் கமலின் 'விக்ரம்' படத்தில் நடிகர் விஜய் சேதுபதி மற்றும் பிரபல மலையாள நடிகர் பஹத் பாசில் ஆகியோர் வில்லனாக நடிக்கின்றனர். மேலும் அர்ஜுன் தாஸ், நரேன், காளிதாஸ் ஜெயராம் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகி உள்ளனர்.

அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு கிரிஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படத்தில் நடிக்கும் நடிகைகள் குறித்த் தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி ஷிவானி, மைனா நந்தினி, மகேஷ்வரி ஆகியோர் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. இவர்கள் மூவரும் சின்னத்திரை சீரியல்களில் நடித்து பிரபலமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## twitter

ஜா.வி@

காணிக்கை என்பது
மனிதனுக்கு தலைமுடி
அதே ஆடு
கோழிகளுக்கு
தலை!

Anusha@

அருகில் இருப்பவர்கள்
அனைவரும்
அன்புகாட்டுவதும்
இல்லை,
அன்பு காட்டும்
அனைவரும்
அருகில் இருப்பதும்
இல்லை...!

ச ப் பா ணி@

பின் வாங்குவதற்கான
அனைத்து வழிகளை
யும் மூடிவிடுவது
வெற்றிக்கான
முதல் படி

இதயவன்@

நிராகரிப்புக்கு
சிறந்த
சன்மானம்
நிராகரிப்பே..!!



# முன்னோக்கிச் செல்!

வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் கடந்துசெல்வதே ஒரு பெரிய சவால்தான். ஒரு நாள் முடிவதற்குள் எத்தனை எத்தனை பாடுகள், இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஒரு நாள் கழிந்து 'மறு நாள்' என்பது எமது வாழ்க்கையை புதிதாக ஆரம்பிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம்தான்.

ஒரு சிலருக்கு ஒரு பழக்கம் உண்டு. கடந்து வந்த நாட்களில் நடந்த விடயங்களை மனதில் இருத்திக்கொண்டு அதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகுவர்.

இன்னும் சிலருக்கு எதிர்காலத்தை நினைத்து பயம். கடந்த காலத்தில் விட்ட தவறுகள் எதிர்காலத்தை பாதித்துவிடுமோ அல்லது அது பெரும் பிரச்சினையாக வந்து நின்றுவிடுமோ என நடக்காத ஒரு விடயத்துக்கு கற்பனை வடிவம் கொடுத்து, மனதளவில் சோர்வடைந்து, 'இறுதியில் மனநோயாளியாகக் கூட மாறிவிடுகின்றனர்.

உண்மையில், நாம் புரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், கடந்தகாலம் என்பது நாம் வாழ்ந்து முடித்த ஒன்று. அதைத் திரும்பத் திரும்ப மனதில் எண்ணிக்கொண்டே, செய்துவிட்ட தவறுகளுக்காக மனம் வருந்துவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.

அதேபோல் எதிர்காலம் என்பது நாம் வாழப்போவது. அது எவ்வாறு அமையும் என்பது யாருக்கும் தெரியாது. வாழும் இந்த நொடி மாத்திரமே நிச்சயமானது. அதை அர்த்தமுள்ளதாக்குவதும் அர்த்தமற்றதாக்;குவதும் நமது கையில்தான் உள்ளது.

பல சங்கடங்களைக் கடந்துதான் மனிதன் வாழ வேண்டும் என்பது நியதி. பல தவறுகள் செய்ததன் பின்னரும் அவன் எப்படித் தன்னைத் திருத்திக் கொண்டு வாழ்கிறான் என்பதே முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவால் ஆப்கானில் இழப்புக்களும் சோகங்களும்

## ரஷ்ய அதிபர் புடின் வெளிப்படை




மொஸ்கோ, செப். 4

**அமெரிக்காவால் ஆப்கானிஸ்தானில் இழப்புக்களும் சோகங்களுமே ஏற்பட்டுள்ளன. பிறிதொரு நாட்டில் இருந்துவந்து இன்னொரு நாட்டுக்குள் அதிகாரம் செலுத்துவது எவராலும் முடியாத விடயம் என்று விமர்சித்துள் ளார் ரஷ்ய அதிபர் புடின்.**

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பில் புடின் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்த கடந்த 20 வருடங்களில் இழப்புக்களும் சோகங்களுமே அங்கு எஞ்சியுள்ளன.

பிறிதொரு நாட்டுக்குள் இருந்துவந்து இன்னொரு நாட்டுக்குள் அதிகாரம் செலுத்துவதை ஒருபோதும் ஏற்க முடியாது. இதனால் இழப்புக்களும் சோகங்களும்தான் ஏற்படும். இதுதான் தற்போது நடந்துள்ளது. அமெரிக்கா தனது தான்தோன்றித்தனமான போக்கைக் கைவிடவேண்டும். நாட்டின் தேசிய மக்களுக்கு (ஆப்கானிஸ்தான் மக்களுக்கு) ஏற்பட்டுள்ள இழப்பை அமெரிக்கா டொலர்களில் தீர்மானிக்க முடியாது. அமெரிக்காவுக்கு ஏற்பட்ட இழப்பைவிட பல விதங்களிலும் பலமடங்குகளில் ஆப்கானிஸ்தான் மக்கள் இழப்பைச் சந்தித்துள்ளனர்-என்றார். ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் நகர்வு குறித்து புடின் தொடர்ச்சியாக விமர்சித்து வருகின்றார். ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் மிக உச்சக்கட்ட விமர்சனங்களைப் புடின் முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 · 09 · 1943

மறைவு 02 · 09 · 2021

## திரு.இளையதம்பி கருணாகரன்

யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடத்தை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இளையதம்பி கருணாகரன் கடந்த (02.09.2021) வியாழக்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய தபாலதிபர் கண பதிப்பிள்ளை இளையதம்பி சத்தியலெட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், நாகரஞ்சிதம், Dr.சுகிர்தரஞ்சிதம், ஜெயரஞ்சிதம், சுகுண ரஞ்சிதம், சிறிகரன், சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசந்திரன், சோமநாதன், பாலேந்திரன் மற்றும் தர்மபாலன், சத்தியபாமா கயிலாயநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Covid-19 விதிமுறைகளுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி நாகரஞ்சிதம் பாலசந்திரன்
0061449645339
அவுஸ்திரேலியா.


தகவல்:
குடும்பத்தினர்.

# வடக்குக் கூட்டணித் தாக்குதல் 350 தலிபான்கள் உயிரிழப்பு!

காபூல், செப். 4

தலிபான்களுக்கும் வடக்குக் கூட்டணிக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதலில் சுமார் 350 தலிபான்கள் கடந்த புதன்கிழமை கொல்லப்பட்டனர்.

தலிபான்களின் ஆட்சியை ஏற்க மறுத்த வடக்குக் கூட்டணியினர் தொடர்ந்தும் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் 350 தலிபான்கள் வடக்குக் கூட்டணிப் படையால் கொல்லப்பட்டனர். 46 பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். (ம)





# மியு எனும் கொரோனாத் திரிபு புதிதாக இனங்காணப்பட்டது!

லண்டன், செப். 4

பல்வேறு உருமாற்றங்களை எடுத்து உலக நாடுகளை அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ், அடுத்ததாக மியு என்ற உருமாற்றத்தை எடுத்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

மிகவும் ஆபத்தான இந்தத் திரிபின் வளர்ச்சி, பாதிப்பு, பரவல் ஆகியவை குறித்துக் கண்காணித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து அல்பா, பீட்டா, டெல்டா, டெல்டா பிளஸ் என்று பல்வேறு வகைகளில் உருமாறி உலக நாடுகளை பீதியில் ஆழ்த்தி வருகிறது. இதில் டெல்டா பிளஸ் வகை கொரோனா வைரஸ்தான் அதிவேகப் பரவல் கொண்டதாகவும், அதிகமான உயிரிழப்பை ஏற்படுத்துவதாகவும் இருப்பதாக இதுவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (ம)



இத்தாலியின் கடற்பகுதியில் சுமார் 50 பேருடன் சென்ற அகதிகள் படகொன்று இத்தாலியக் கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டு படகில் இருந்தவர்கள் மீட்கப்பட்டனர். (ம)



# பாம்பின் விஷத்திலிருந்து கொரோனாவுக்கு மருந்து!

பிரேசிலியா, செப். 4

பாம்பின் விஷத்திலிருந்து கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் பிரேசில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பிட்ட வகைப் பாம்பு விஷத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட மருந்தை குரங்குகளுக்குச் சோதனை செய்ததில், குரங்குகளின் செல்களில் கொரோனா வைரஸ் இனப்பெருக்கம் செய்வதைக் குறிப்பிட்டளவு தடுக்கின்றமை தெரியவந்துள்ளது. இதையடுத்தே இதன் தொடர்ச்சியான படிநிலைகளைக் கடந்து மருந்து தயாரிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் தீவிரம் காட்டியுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் திரிபுகள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க இயலும்!

பிரதி சுகாதாரப் பணிப்பாளருக்கு மருத்துவ நிபுணர் ரவி ரன்னன் பதில்

கொழும்பு, செப்.4

**கொரோனா வைரஸின் புதிய திரிபுகள் நாட்டுக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தப் பொறிமுறையும் இல்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.**

இவ்வாறு மருத்துவநிபுணர் ரவி ரன்னன் எலிய தெரிவித்துள்ளார்.

புதிய வைரஸ் திரிபு ஒரு நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கான பொறிமுறைகள் எந்தவொரு நாட்டிலும் இல்லையென்று பிரதி சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே ரவி ரன்னன் எலிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அதிதீவிர எல்லைக்கட்டுப்பாடுகள் மற்றும் அதிக எண்ணிக்கையான பரிசோதனைகளின் ஊடாக புதிய திரிபுகள் உள்நுழைவதையும் அவை வேகமாகப் பரவுவதையும் கட்டுப்படுத்த முடியும்.

தற்போது தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டிருக்கும் கொரோனா வைரஸின் புதிய திரிபு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் அடையாளம் காணப்படலாம். என்று தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## மருத்துவர் முன் திடீரென வீழ்ந்து இறந்த இளைஞர்!

கொழும்பு, செப்.4

சிகிச்சைக்குச் சென்ற இளைஞர் ஒருவர், மருத்துவமனையில் மருத்துவருக்கு முன்பாக மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கண்டி, குண்டசாலையில் நடநதுள்ளது.

மஹமெவ்னா பிரதேசத்தில் உள்ள கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்கு இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

இடுப்பு வலி தொடர்பில் பரிசோதனைக்காகச் சென்றிருந்த இந்த இளைஞர் திடீரென மருத்துவருக்கு முன்பாக மயங்கி வீழ்ந்து உயிரிந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இளைஞரின் உடலில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளைப் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



## தெங்கு தினத்தை முன்னிட்டு பத்து நினைவு முத்திரைகள்!

கொழும்பு, செப். 4

சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு 10 நினைவு முத்திரைகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் வெளியிடப்பட்டுள்ளன. அலரி மாளிகையில் வைத்து நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன.

1969ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆசிய பசுபிக் தெங்கு குழுமத்தினால் 1998ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 25ஆவது கூட்டத்தின்போது முதல்முறையாக செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி உலக தெங்கு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

தென்னைப் பயிர்ச்செய்கைக்கான ஆராய்ச்சிக்காக 1929ஆம் ஆண்டு நிறுவப்பட்ட உலகின் ஒரே நிறுவனம் இலங்கைத் தெங்கு ஆராய்ச்சி நிறுவனமாகும். இம்முறை தெங்கு தினத்தை முன்னிட்டு இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் முன்மொழியப்பட்டிருந்த பல வேலைத்திட்டங்களை கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்காலத்தில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், 10 நினைவு முத்திரைகள் தபால் திணைக்களத்துடன் இணைந்து வெளியிடப்பட்டுள்ளன. (ம)

## விமர்சிப்போரின் வீட்டுக்கு சி.ஐ.டியை அனுப்பும் அரசு!

*எதிர்க்கட்சி கடும் விமர்சனம்*

கொழும்பு, செப்.4

இலங்கை அரசை விமர்சிக்கும் அனைவரையும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைப்பது வழமையான விடயமாக மாறியுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷெஹான் மாலக கமகே என்ற இளைஞர் கடந்த 8 நாள்களாகத் தொடர்ச்சியாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார். அரசுக்கு எதிரான கருத்துக்களைக் கூறுவோர் விசாரணைக்குட்படுத்தப்படுவது வழமையாகி விட்டது.

அதேநேரம், அமைச்சர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிக் குணமடைந்து வெளியே வந்து இவை அனைத்துக்கும் எதிர்க்கட்சிதான் காரணம் என்று கூறியிருக்கிறார். இது நகைச்சுவையானது.

நாமா சரியான நேரத்தில் தடுப்பூசிகளைக் கொண்டு வராது இருந்தோம்?, நாங்களா சரியான நேரத்துக்கு நாட்டை முடக்காது இருந்தோம்?. அந்த அமைச்சருக்கு நான் கூறிக்கொள்கின்றேன். உங்களின் தவறுகளை தவிர்க்க ஒருவருக்கொருவர் விரல் நீட்டுவதை இனியாவது தவிர்த்துக்கொள்ளுங்கள் - என்றார். (ஏ-இ)

## மலையகத்தின் மீது தமிழகம் கரிசனை

*முதலமைச்சருடன் கலந்துரையாடல்*

கொழும்பு,செப்.4

தமிழகத்துக்கும், இலங்கையின் மலையகத்துக்கும் இடையிலான இருதரப்பு பரஸ்பர உறவுகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.கா.ஸ்டாலினுடன் கலந்துரையாடப்பட்டது.

தென்னிந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இலங்கை சார்பில் சந்திப்பை மேற்கொண்டார்.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீண்டநாள் அரசியல் போராட்டங்களுக்கு மத்தியில் இலங்கையில் மலையகத்துக்கான தனியான பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களைச் செய்வதற்கு, தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்திய சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார். அதற்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அதேவேளை இந்திய வம்சாவளி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமிடையிலான உறவு நீடிக்கும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய அரசின் மூலமும், தமிழ்நாட்டு அரசின் மூலமும் பல்வேறு அபிவிருத்திகள் மலையக மக்களுக்கு வந்தடையும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளது. என்றுள்ளது. (ஓ.4)



## தொற்றுக்குள்ளாகும் சிறார்களது எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி!

கொழும்பு, செப்.4

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை இலங்கையில் வீழ்ச்சிகண்டுள்ளது என்று கொழும்பு றிஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ விஜேசூரிய தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

இந்த நிலைமையைத் தவறாகப் புரிந்துகொண்டு மக்கள் சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்படக் கூடாது. கொழும்பு சீமாட்டி றிஜ்வே மருத்துவமனையில் கொரோனாத் தொற்றுடன் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை என்பன குறைந்துள்ளன. மூன்று சிறுவர்கள் மாத்திரமே தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்களை மருத்துவமனைக்கு அழைத்து வருவதில் தாமதமோ, தயக்கமோ வேண்டாம் என்று நாம் பொதுமக்களுக்குக் கூறுகின்றோம். அவ்வாறான தாமதங்கள் உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடும். தற்போது தொற்றுடன் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளமை நல்லதொரு பெறுபேறு. ஆயினும் நாங்கள் தொடர்ந்தும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது நல்லது - என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எள் தரும் நலன்கள்

எள்ளில் கல்சியம், பொஸ்பரஸ், மக்னீசியம், புரோட்டீன் ஜிங்க், விற்றமின் பி, இரும்புச்சத்து போன்றவை அடங்கியுள்ளன. எள்ளில் செய்த பதார்த்தங்களை அடிக்கடி சாப்பிடுவது நல்லது. பெண்களுக்கு மாதவிடாய் நிற்கப் போகும் சமயங்களில் ஏற்படும் எலும்புகளின் தேய்மானத்தை எள் குறைக்கும். தாய்ப்பால் அதிகம் சுரக்க உதவும். அனீமியா என்ற இரத்தச் சோகையை நீக்கும். சுவாசத் தடை நீக்கும். ஆஸ்துமா ஓரளவுக்குக் கட்டுப்படும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். தினமும் இட்லியில் அல்லது சுடு சாதத்தில் நல்லெண்ணெய் ஊற்றி சாப்பிட்டு வந்தால் உடல் பளபளவென மாறும். எள்ளை வெல்லம் சேர்த்து உருண்டையாகவோ பொடியாகவோ சாப்பிடலாம்.




# சிறுநீரக கற்களுக்கு...

அன்னாசிப்பழம் அடிக்கடி சாப்பிட்டு வர சிறுநீரகக் கற்கள் கரையும். இதயக் கோளாறு, பலவீனம் குணமாகும். அன்னாசித் துண்டுகளை தேனில் கலந்து சாப்பிட்டு வர உடல்பலம் கூடும். உடல் பளபளப்பாகும்.



# ஜொலிக்க வைக்கும் தக்காளி

- தக்காளியை தோல் மற்றும் விதைகள் நீக்கி கூழாக்குங்கள். ஒரு தேக்கரண்டி ஒலிவ் எண்ணெயை முகத்தில் தடவுங்கள். அதன் மேல் இந்த கூழைத் தடவி பத்து நிமிடம் கழித்து கழுவுங்கள்.
- ஒரு சிலருக்கு முகத்தில் எப்போதும் எண்ணெய் வடிந்தபடி இருக்கும் மேக்கப் போட்டாலும் தங்காது. இவர்கள் தக்காளிப் பழத்தை நன்கு அரைத்து, அந்த விழுதை முகத்தில் போட்டு அரை மணிநேரம் கழித்து கழுவினால் முகம் பளபளப்பாகும்.
- தக்காளி விழுது, பாதாம் விழுது தலா அரைத் தேக்கரண்டி எடுத்து கலந்து முகத்தில் தடவுங்கள். இதைச் செய்வதால் முகத்தில் தோன்றும் சுருக்கங்கள் மறையும்.
- உருளைக்கிழங்கு துருவல்சாறு ஒரு தேக்கரண்டி, தக்காளி விழுது அரைத் தேக்கரண்டி இரண்டையும் கலந்து முகத்தில் தேய்த்துவந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்து முகம் மின்னும்.
- தக்காளி விழுதுடன் சிறிது தயிர் கலந்து முகத்தில் தொடர்ந்து பூசி வந்தால் சருமம் மிருதுவாவதைக் காணலாம்.
- தக்காளிச் சாறுடன் சிறிது ரவையைக் கலந்து முகத்தில் தேய்த்துக் கழுவினால் முகம் பிரகாசிக்கும். இதனை இயற்கை ஸ்கரப்பாக உபயோகிக்கலாம்.



# கண் பாதுகாப்பு குறிப்புகள்

தொலைக்காட்சி பார்க்கும் போது இருட்டு அறையில் பார்க்காமல் திரைக்குப் பின் ஏதேனும் ஓர் ஒளி இருக்கும்படி கவனித்துக் கொள்ளவும்.

படிக்கும் பொழுது கண்களை மிகவும் அலட்டாமல், கண்கள் சோர்வடையும் வரை நீடித்துப் படிக்காமல் இருக்கவும்.

கீரை உணவுகளை வாரம் இரண்டுமுறையாவது சாப்பிடுவது அவசியம். மீன்எண்ணெய், தேங்காய்எண்ணெய், ஒலிவ் எண்ணெய் கண்களுக்கு அவசியம். பலவகையான நிறங்களை கொண்ட இயற்கை உணவுகளை அதிகம் சேர்க்கலாம். முட்டை, வெண்ணெய் என்பவற்றை வாரம் இருமுறை என சாப்பிடலாம்.

# சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமில்லை

சுக்கை இழைத்துப் பற்றுப் போட தலைவலி நீங்கும். சுக்கு சிறு துண்டு வாயில் இட்டு மென்று அடக்கி வைக்க பல்வலி தீரும். சுக்கை நசுக்கி ஒரு துணியில் சிறு பொட்டலம் கட்டி காதில் வைத்தி ருக்க காதடைப்பு, நீரடைப்பு தீரும்.

சுக்குப்பொடி வெந்நீரில் கலந்து குடிக்க அஜீரணம் நீங்கும். உஷ்ணபேதி, சீதபேதி, வாந்தியைக் கட்டுப்படுத்தும்.

மார்பு எரிச்சல், வயிற்றுவலி, நெஞ்சுவலி, புளியேப்பம் இவற்றைப் போக்கும்.

வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல் நோயைத் தீர்க்கும்.

சளி, இருமலைப் போக்கும்.

வாத நோய்களை கட்டுப்படுத்தும்.

ஆசனவாய் கடுப்பு, எரிச்சல் முதலியவற்றைப் போக்கும்.

காசம் எனும் ஆஸ்துமா, சைனஸ் நோய்களை கட்டுப்படுத்தும்.

இதய நோய்கள் மற்றும் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.

உடலில் ஏற்படும் வீக்கம், கட்டி இவைகளை குணப்படுத்தும்.

நரம்புகள் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிறந்த மருந்தாகும்.

சுக்குத்தைலம் தலைக்குத் தேய்த்து குளிக்க ஒற்றைத்தலைவலி, தலைவலி, சைனஸ், காது வலி இவைகள் தீரும். தினமும் சுக்கை நாம் உட்கொள்ள நோய்கள் வராமலும், வந்த நோய்கள் நீங்கவும் பேருதவியாக இருக்கும்.



# செப்புப் பாத்திரத்தில் வைக்கப்படும் நீரின் நன்மைகள்!



செப்புப் பாத்திரத்தில் உணவு சமைத்துப் பயன்படுத்திவந்தால், விந்தணு உற்பத்தியும் அதிகமாகும். இதைத் தவிர செப்பின் அன்டி பாக்ரீயல் மற்றும் அன்டி வைரல் தன்மைகள், உடலில் ஏற்பட்டுள்ள புண்களை விரைவாகக் குணமடையச் செய்கின்றன.

செம்பு இயற்கையாகவே இளமையைத் தக்க வைக்க உதவுவதுதான். இதில் இடம்பெற்றுள்ள அன்டிஆக்ஸிடன்ட்கள் முகத்தில் தோல் சுருங்குவதைத் தடுப்பதுடன், கருவளையங்கள் உருவாவதையும் அறவே தடுக்கிறது. உடல் மற்றும் சருமத்துக்கு சீரான இரத்த ஓட்டத்தை அளிப்பதுடன், தோலுக்கு புதுப் பொலிவையும் கொடுக்கிறது.

செப்புப் பாத்திரத்தில் சேகரித்த தண்ணீரைத் தொடர்ந்து பருகிவந்தால், உடல் எடை குறைந்துவிடும். மேலும் வயிற்றில் உள்ள உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பாக்ரீயாக்களை செப்பு அழித்துவிடும்.

செப்பு உடலில் சேரும்போது இரத்தச் சோகை பிரச்சினையை கட்டுப்படுத்துகிறது.

எ ;ரோய்டு செயற்பாட்டை ஒழுங்குப்படுத்தும் அரிய கனிமம் தாமிரம். தைரோய்டு சுரப்பி சீராக செயற்பட இது அதிமுக்கியமானதாக கருதப்படுகிறது.

**குறிப்பு:**

செப்புப் பாத்திரத்தின் உட்பகுதியை எலுமிச்சை கலந்த தண்ணீர், வினிகர், சமையல் சோடா ஆகியவற்றைக் கொண்டு சுத்தம் செய்வது நல்லது. இவ்வாறு சுத்தம் செய்துவிட்டு 8 மணிநேரம் அப்படியே வைத்துவிட வேண்டும். அதன் பிறகு பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 . 06 . 1950 | 03 . 09 . 2021 |



## தம்பிராசா பாக்கியம்

காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாக கொண்டவரும், தற்பொழுது நல்லூரில் வசித்தவருமான தம்பிராசா பாக்கியம் நேற்று (03.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், ஆறுமுகம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், லோகேஸ்வரனின் (ஈசன்- அவுஸ்திரேலியா) அன்புத் தாயாரும், கலைவாணியின் அன்பு மாமியாரும், நாகேஸ்வரி (நாகம்மா), சடாச்சரம், கனகம்மா (காலஞ்சென்ற), பரமநாதன் (காலஞ்சென்ற) மற்றும் மாணிக்கம், தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பரஞ்சோதி (காலஞ்சென்ற), பொன்னம்மா, நவசிவாயம் (காலஞ்சென்ற), உலகநாதன் (சந்திரன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2021) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**44/16, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மகன்** - 077 433 9427

# யாழ்ப்பாணத்துக்கு வந்தது 60,000 கிலோகிராம் சீனி

கொடிகாமம், செப். 4

யாழ்ப்பாண மாவட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட 89 ஆயிரம் கிலோகிராம் சீனியில், முதற்கட்டமாக 60 ஆயிரம் கிலோகிராம் சீனி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. எடுத்துவரப்பட்ட சீனி, யாழ்ப்பாண மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் ஊடாக மட்டும் விற்பனை செய்யப்படவுள்ளன. (த -159)

# மரண அறிவித்தல்


## நாதஸ்வர மேதை கலைமாமணி அளவெட்டி S.S. சிதம்பரநாதன்



நாதஸ்வர மேதை
கலைமாமணி
அளவெட்டி
**S.S.சிதம்பரநாதன்**
அவர்கள் நேற்று
(03.09.2021)
வெள்ளிக்கிழமை
கொழும்பில் இயற்கை
எய்தினார்.
இந்த அறிவித்தலை
அனைவரும் ஏற்றுக்
கொள்ளுமாறு
கேட்டுக்
கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**011 272 5011**

# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு சித்திரவடிவேலு

**(ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்)**

சந்நிதி வீதி, தம்பாலை அச்சுவேலியைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விலங்கியல்துறை, தாவரவியல் துறைத் தலைவரும் கடல் வள அபிவிருத்தி நிலைய பணிப்பாளருமான ஓய்வுநிலை பேராசிரியர் கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் நேற்று (03.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மனோன்மணி தம்பதியரின் மருமகனும், திருமதி தவமலரின் பாசமிகு கணவரும், கருணசீலன் (லண்டன்), தர்மசீலன் (லண்டன்), துஸ்யந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசலா (லண்டன்), கங்கேஸ்வரி (லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், கபிலன், கமலிக்கா, கவிதா, தனுஜா, யதுசன், பவித்திரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.09.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சி. கருணசீலன் (மகன்)** : 00447771708349
**சி.தர்மசீலன் (மகன்)** : 0044793139276
**[illegible].யோகேஸ்வரன் (மருமகன்)** : 00447404971884
**யோ.துஷ்யந்தி (மகள்)** : 0094212058307

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 . 08 . 1933 | 03 . 09 . 2021 |



## திரு.சின்னத்துரை பாலசிங்கம்

**(சீரணி நாகபூசணி அம்பாள் அறங்காவலர் சபை உறுப்பினர்)**

சண்டிலிப்பாய் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை பாலசிங்கம் (சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் அறங்காவலர் சபை) அவர்கள் நேற்று (03.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜிதா, வனித்தா, சுஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (ஜேர்மனி), விஜயகுமாரன் (ஜேர்மனி), சுதாகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜிதன், வாகீசன், விதுசா, பிரியன், கிருசன், கீதாணி, வைஷ்ணவி, ஜிவேணி ஆகியோரின் பாசமிகு பேரனும், இராயேஸ்வரி (லண்டன்), இரத்தினசிங்கம் (மலேசியா), புஸ்பராணி (கட்டுடை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சண்டிலிப்பாயில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பாலசிங்கம் நகுலேஸ்வரி**
**(021 2250 641)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா ஏழாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 03 . 12 . 1939

உதிர்வு 22 . 08 . 2014

அமரர்

## செல்லையா மகேஸ்வரன்

(ஸ்தாபகர் ஜெவ்னா எலக்றிக்கல்ஸ்,
மகேஸ் அன் சன்ஸ்)

**திதி: அபரபட்ச திரியோதசி (04.09.2021)**

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகளல்ல எத்தனை
ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

127/ 6, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நீங்காத நினைவலைகளில் பத்து ஆண்டுகள்

மண்ணில் 12 . 02 . 1928



விண்ணில் 04 . 09 . 2011

## அமரர் தம்பிஐயா இரத்தினராசா

(முன்னாள் முகாமையாளர் கதிர் ஹாட்வெயர்ஸ், யாழ்ப்பாணம்)

பத்தாண்டுகள் ஆனபோதிலும்
பரிதவிக்குதே இன்னும் எம் உள்ளம்
இறந்தாலும் இறவாது உம் நினைவு
மறந்தாலும் மடியாது உம் உறவு.

21, சந்தனமாதா கோவில்
2ம் ஒழுங்கை, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

# கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்



## திருமதி செல்வநாயகம் அருள்நேசராணி

தாயின் மடியில் 14.07.1944

இறைவனின் இல்லத்தில் 02.09.2021

"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்"
(பிலி 1:21)

206/3, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாககொண்ட திருமதி செல்வநாயகம் அருள் நேசராணி கடந்த (02.09.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், அன்பழகன் (நோர்வே), செந்தமிழ்செல்வி (கனடா), இளங்கோ (கனடா), அருள்மொழி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு தாயும் சிவரூபி, பென்சமின் கொன்ஸ்ரன்ட், சித்திரா, இரதீஸ்வரன் (ஜேம்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சாம், சிபி, சங்கவி, சஞ்சிகா, இலக்கியன், சித்தார்த்தன், கதிர், வேஜினி, மேரி ஸிலைஸர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்,

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை கடந்த (02.09.2021) அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 360 9005
077 704 3059

தகவல்:
இரதீஸ்வரன் அருள்மொழி
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திரு.நாகலிங்கம் சபாரத்தினம்

யாழ் மாவட்டம் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த ஆச்சாரியார் நாகலிங்கம் சபாரத்தினம் அவர்கள் கடந்த (01.09.2021) புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மாரிமுத்து தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், கனகம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், மகேஸ்வரி, விஜயம்மா மற்றும் யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் உடன்பிறந்த சோதரனும், வேல்நாதன் (கனடா), கௌரி (சுவிஸ்), கௌசல்யா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதி, நடேசன், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவன், கவினா, கயூரி, சுகிர்தா ஆகியோரின் பிரிய பேரனும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.09.2021) திங்கட் கிழமை கனடாவில் இடம்பெற்று, (கனடா நேரம் காலை 07.00-09.00) பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் (கனடா)
வேல்நாதன் +14164180804 (கனடா)
குகராஜ் +94776660698 (இலங்கை)

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 09 . 1944



மறைவு 03 . 09 . 2021

## திரு.வேலுப்பிள்ளை கனகசபை

(இளைப்பாறிய அதிபர்)

பயிரிக்கூடல் காரைநகரை பிறப்பிடமாகவும், வாரிவளவு காரைநகர், நட்டாங்கண்டல் மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகசபை (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் 03.09.2021 வெள்ளிகிழமையன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தப்பு வேலுப்பிள்ளை மற்றும் வள்ளியம்மை வேலுப்பிள்ளை அவர்களின் புதல்வனும், காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும், கமலாதேவியின் (பூசணி) அன்பு கணவரும், நிரஞ்சன், ஜெனார்த்தனன், ஜமுனா, பிரதீபா ஆகியோரின் அன்பு தந்தையும், சிவந்தினி,கிருபாலினி, ஜெயதீபன், ரவிசங்கர் ஆகியோரின் மாமனாரும் பேரம்பலம், பரமேஷ்வரி ஆகியோரின் சகோதரரும் நயனி, புவீனா . ராகவி, அக்ஷயா, மானஸ்விகா , நிலவன் , ஓவியா , அகஸ்தியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மகன் – நிரஞ்சன் +61405712626
மகன் – ஜெனார்த்தனன் 0768046149, 0771606437
மகள் – ஜமுனா +61430042133
மகள் – பிரதீபா +16478322073

தகவல்:
குடும்பத்தினர்.
மனைவி, பிள்ளைகள்
10/2, Champion Lane,
Kokuvil, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் தேவை. தொடர்பு: **077 3276502**

# தடுப்பூசியின் பக்கவிளைவுகளுக்கு அரசுதான் பொறுப்பு

## சிங்கள ராவய அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

“கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதால் ஏற்படும் பக்க விளைவுகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும்” என்று சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“பங்களாதேஷுக்குத் தடுப்பூசிகள் 10 டொலருக்கு வழங்கப்படுகின்றன. ஆனால், எமது நாட்டுக்கு 15 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றன. அந்தவகையில் குறித்த விவகாரத்தில் வியாபாரம் இடம்பெறுகின்றது. இந்தநிலையில், ஜனாதிபதி தடுப்பூசி பெற்றுக்கொண்டாரா என்பது தெரியாது. ஏனெனில் அவர் தடுப்பூசி ஏற்றிக்கொண்டதை நாம் பார்க்கவில்லை அல்லவா?

எந்தத் தடுப்பூசி வழங்கப்பட்டாலும் நாம் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஏனெனில் இந்தத் தடுப்பூசிகளை ஏற்றிய பின்னரே அதிகளவிலானோர் உயிரிழக்க நேரிட்டது.

அதேபோல் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னரே அதிகளவிலானோர் நோயாளர் களாக்கப்பட்டனர். ஆகவே, பலவந்தமாகத் தடுப்பூசிகளை ஏற்றுவார்களாயின் அப்பாவி மக்கள் தொடர்பான பொறுப்பை அரசு பொறுப்பேற்க வேண்டும்.

அதேபோல் மக்களுக்குத் தடுப்பூசிகளால் ஏற்பட்டுள்ள பக்க விளைவுகளுக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும்.

சாதாரணமாக கொரோனா போன்ற நோய் நிலைகளுக்கான தடுப்பூசி கண்டுபிடிப்புக்கான ஆய்வுக்கு இரண்டு வருடங்களேனும் தேவைப்படும். முதலில் எலிகளுக்கு குறித்த தடுப்பூசிகள் ஏற்றி பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்து மாடுகளுக்கு ஏற்றி பரிசோதிப்பர்.

ஆனால், எமது நாட்டு மக்களையும் மாடுகள் எனக் கருதி அவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றுகின்றனர்” என்றார். (த-22)

**மரண அறிவித்தல்**



தோற்றம் 13 . 09 . 1957

மறைவு 29 . 08 . 2021

**அமரர் பேராயிரம்பிள்ளை இளமுருகன்**

(B.Sc, PGDE, LLB, Attoney-At-Law and Notary Public

சட்டத்தரணி, ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தசாமி கோவிலடி, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணியும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான பேராயிரம்பிள்ளை இளமுருகன் அவர்கள் கடந்த (29.08.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான பேராயிரம்பிள்ளை பரமேஸ்வரி தம்பதியரின் ஏக புத்திரனும் நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை, கொட்டாஞ்சேனை சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்பு, யா/ உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி என்பவற்றின் முன்னைநாள் ஆசிரியரும், சட்டத்தரணியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தசாமி கோவிலடி, இணுவில் மேற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**0041793322569, 077 6450 333**

**கண்ணீர் அஞ்சலி**



எமது சங்க உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச செயலக சக கிராம அலுவலருமான **செல்வி சர்மிளா ஞானப்பிரகாசம்** அவர்களின் பாசமிகு சகோதரன்

**ஞானப்பிரகாசம் பிரகாஷ்**

அவர்கள் 02.09.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்**

**தென்மராட்சி பிரதேச செயலக கிராம அலுவலர்கள்.**

**கண்ணீர் அஞ்சலி**



கொடிகாமம் தெற்கு J/328 பிரிவின் கிராம உத்தியோகத்தர் **செல்வி ஞா.சர்மிளா** அவர்களின் பாசமிகு சகோதரன்

**ஞானப்பிரகாசம் பிரகாஷ்**

அவர்கள் 02.09.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**கொடிகாமம் தெற்கு**

**கிராம அபிவிருத்தி சங்கமும், மக்களும்**

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை

முல்லைத்தீவு

**கேள்வி அறிவித்தல்**

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு 2021/22 ம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள்

1. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2021/22ம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
2. அ) சமைத்த உணவு வழங்கல்கள்
   ஆ) அழுக்குத்துணிகள் சலவை செய்தல்

2021 முதல் 2022 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 03.09.2021 தொடக்கம் 23.09.2021 ம் திகதி வரை காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/ தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

3. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
4. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 24.09.2021 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 24.09.2021 மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.
5. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

A) சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | சமைத்த உணவு | 1,500.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | சமைத்த உணவு | 1,500.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, முல்லைத்தீவு | சமைத்த உணவு | 1,500.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நுவர | சமைத்த உணவு | 1,500.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, அளம்பில் | சமைத்த உணவு | 1,500.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, கொக்கிளாய் | சமைத்த உணவு | 1,500.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல் | சமைத்த உணவு | 1,500.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, மூங்கிலாறு | சமைத்த உணவு | 1,500.00 | 20,000.00 |

B) அழுக்குத் துணி சலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி(ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 500.00 | 4,000.00 |
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல். | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, முல்லைத்தீவு | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நுவர | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, அளம்பில் | 500.00 | 4,000.00 |

06 ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.


07 கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

08 கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

09 மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். [illegible]

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு
பி.சு.சே.ப.பணிமனை,
முல்லைத்தீவு.

**மரண அறிவித்தல்**



**கதிரவேலு (தம்பு) நிர்மலராசா**

யாழ் நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் 170, பாண்டியன்குளம் மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நிர்மலராசா அவர்கள் கடந்த (27.08.2021) அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு காமாட்சி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற தலுக்கோடி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரதியின் அன்புக் கணவரும், குகன்யாவின் பாசமிகு தந்தையும், நவமணிதேவி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் கோமதிதேவி, கோகிலாதேவி, புனிதவதி, உருத்திராசா, தர்மசோதிராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பேரின்பரதி, ஜசோரதி, குலநாயகம், குணராணி, கோமளாம்பிகை, சந்திரகாந்தா, சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1198, திருநகர் தெற்கு, கிளிநொச்சி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செப்ரெம்பர்13....

பட்ட உயர்மட்ட சுகாதார அதிகாரிகளும், பாதுகாப்புத் தரப்பினரும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கடந்தவாரம் பதிவான தொற்றாளர்கள், மரண எண்ணிக்கை உட்பட கொரோனா நிலைமை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது. சுகாதாரத் தரப்புகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன. அதன் பின்னர், தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை 13 ஆம் திகதிவரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 6 ஆம் திகதி காலை 4 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், ஊரடங்கு காலத்திலும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், சாவு எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமையால் ஊரடங்கை மேலும் நீடிக்குமாறு சுகாதார நிபுணர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையிலேயே எதிர்வரும் 13 ஆம் திகதி வரை ஊரடங்கை நீடிக்கும் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளார் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதேவேளை, ஊரடங்கு நடைமுறையில் இருந்தாலும் தற்போது அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்குமுன்னர் போன்ற ஏற்றுமதி துறைசார் தொழிற்சாலைகள் சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் தொடர்ந்தும் செயற்பட முடியும். அனுமதி வழங்கப்பட்டுள்ள சேவைகளையும் முன்னெடுக்க முடியும்.

அதேபோல தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டமும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-44,22)

### சாவு....

'கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 202 பேரில் 89 பெண்களும், 113 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஆண்கள் இருவரும், பெண்கள் மூவரும் என 05 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 24 ஆண்கள், 18 பெண்கள் என 42 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 155 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 87 ஆண்களும், 68 பெண்களும் அடங்குகின்றனர். (த-22)

### கோதுமை....

பட்டுள்ளது.

இந்தநிலையில் கோதுமை மா விலையை அந்த நிறுவனம் அதிகரித்துள்ளது. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு தெரியப்படுத்தாமல் இந்த விலை உயர்வை அந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-இ)

### விலை, திகதி....

அதிகாரசபையினர் நேற்று கைப்பற்றினர்.

அத்துடன், குறித்த விநியோக நிலையத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கோதுமை மா அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுவருவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனையடுத்து வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் வவுனியா நகரில் நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்போதே குறித்த வியாபார நிலையம் சிக்கியது. (த110,18)

### மக்கள்....

துக்கு முக்கியமான படி என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது. இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்து கொள்வார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார், யாழ்ப்பாண மாவட்ட நாடாமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

ஜனாதிபதியின் அவசர காலச் சட்ட அறிவிப்புத் தொடர்பில், விக்னேஸ்வரன் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

2243/1 அதி விசேட வர்த்தமானி மூலம் கொரோனாவைக் காரணம்காட்டி அவசரகால நிலையை அறிவித்துள்ளார் ஜனாதிபதி.

உண்மையில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டம் அனர்த்த முகாமைத்துவச் சட்டம். அதன் கீழ் ஒரு செயலணியை நிறுவி மருத்துவ ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அதிலிருந்து ஜனாதிபதி ஆரம்பத்திலேயே தவறிவிட்டார். பல குற்றங்களை அவர் புரிந்துள்ளார்.

1. இவ்வாறான அனர்த்த முகாமைத்துவ செயலணியை இதுவரையில் நியமிக்காமை.

2. கொவிட் 19க்கு எதிரான நடவடிக்கைகளை துறைசார் நிபுணர்களை வைத்து இதுவரையில் கட்டுப்படுத்தாதது.

3. ஆயுதமேந்தி மக்களைக் கொல்லும் இராணுவத்தை கொரோனாவைக் கட்டுப்படுத்த நியமித்தமை.

4. கொரோனாவைக் காரணம் காட்டி அவசரகால நிலையை ஏற்படுத்தி சர்வாதிகாரத்துக்கு வித்திட்டமை.

ஏற்கனவே பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் உள்ளது. அடுத்து கொரோனாவைக் கட்டுப்படுத்த இராணுவத்தை அழைத்து அவர்கள் எங்கும் வியாபித்திருக்கின்றார்கள். மூன்றாவதாக அவசரகாலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளார். என்று குறிப்பிட்டுள்ளார். (த)

### நிர்ணய....

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்." என்று கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசி மற்றும் சீனி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த விலைக்கு அதிகமாக ஏதேனும் கடைகளில், நிறுவனங்களில் விற்பனை செய்யப்படுமானால் அது தொடர்பில் நுகர்வோர் 1977 என்ற இலக்கத்துக்கு முறையிடலாம். நுகர்வோர் அதிகார சபையால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்.

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தொகையை அதிகரிப்பதற்கான திருத்தச்சட்டமூலம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

தற்போதைய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டுப்பாட்டு விலையைமீறி, தனிநபர்கள் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டால் ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரையே தண்டப்பணம் அறிவிடப்படுகின்றது. புதிய திருத்தத்தின் பிரகாரம் அந்தத் தொகை ஒரு லட்சம் முதல் 10 லட்சம்வரை அதிகரிக்கப்படும்.

நிர்ணய விலை மோசடியில் 2ஆவது தடவையும் சிக்கும் தனிநபர்களுக்கு 2 ஆயிரம் முதல் 20 ஆயிரம்வரையே தண்டப்பணம் அறிவிடப்படுகின்றது. அந்த தொகை 2 லட்சம் முதல் 20 லட்சம்வரை அதிகரிக்கப்படும். நீதிமன்றம் தீர்மானித்தால் 6 மாதங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம்.

அத்துடன், நிர்ணய விலையை மீறும்வகையில் நிறுவனம் செயற்பட்டால் 10 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை அறவிடப்படுகின்றது. அந்ததொகை 10 லட்சம் முதல் 100 லட்சம் வரை அதிகரிக்கப்படவுள்ளது. 2ஆவது தடவையும் மோசடியில் ஈடுபட்டால் தற்போது 20 ஆயிரம் முதல் 2 லட்சம் வரையே அறவிடப்படுகின்றது. அந்தத் தொகை 20 லட்சத்திலிருந்து 200 லட்சம்வரை அதிகரிக்கப்படும்.

அதேவேளை, அரசு விலையைக் குறைக்காது என்றனர். ஆனால் தற்போது விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவ ஆட்சி என குற்றஞ்சாட்டுகின்றனர்." என்றார். (த-44)

### வெளியாகும்....

சரியாக தெரியாத பெரும்பாலான மக்களுக்கு அது அநீதியாகும். அதனால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தீர்ப்புகளை வெளியிடவேண்டும் என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் அரச கருமமொழியாக சிங்களம் மற்றும் தமிழ் மொழி சட்டமாக்கப்பட்டுள்ள நிலையில், பிரதான அரச நிறுவனங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் அறிக்கைகளை விடுவது தொடர்பில்அ வர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (த-இ)

### தொற்று....

பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 51 ஆயிரத்து 401 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,998 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 80 ஆயிரத்து 166 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

### வவுனியாவில்....

வவுனியா மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிழந்தார்.

ஏனைய இருவரும் நேற்று திடீர் சுகவீனமுற்றநிலையில் வீடுகளில் சாவடைந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தேக்கவத்தை, தாண்டிக்குளம், சூசைப்பிள்ளையார்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர். (த-110)

### மாணவர்களுக்கு....

நடவடிக்கையை, எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குள் முன்னெடுப்பதற்கான தேவை தொடர்பிலும், அவதானம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணிக் கூட்டத்தில் இந்த விடயத்தை ஜனாதிபதி கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு குறிப்பிட்டது. (த)

### யாழ்ப்பாணத்தில்....

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற மாங்குளத்தைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

நெல்லியடி கரணவாயைச் சேர்ந்த 52 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

அவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயற்றாலையைச் சேர்ந்த 86 வயதுடைய பெண் ஒருவரும் நுணாவில் கிழக்கைச் சேர்ந்த 90 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 271ஆக உயர்வடைந்துள்ளது. (த26,159)

### ஒரே கிராமத்தில்....

மத்தில் வசிக்கும் பலருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து கிராம அலுவலர் ஊடாக சாந்தசோலை மாதர் அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் கோரிக்கைக்கு அமைவாக சுகாதாரத்துறையினரால் இன்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த கிராமத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேருக்குத் தொற்றுஉறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பரிசோதனைக்கு இரு குடும்பங்கள் ஒத்துழைக்க மறுத்துள்ளன. ஆயினும், பொலிஸாரின் அறிவுறுத்தலையடுத்து அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஒரு குடும்பத்தை சேர்ந்த அங்கத்தவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த 60 பேரும் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சாந்தசோலையில் ஏற்கனவே பிறந்ததின நிகழ்வில் கலந்துகொண்ட பலருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவு சர்வதேச கோல்கள் ரொனால்டோ உலக சாதனை!

**லிஸ்பன், செப். 4**

**சர்வதேச கால்பந்தாட்ட அரங்கில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர் என்ற மகத்தான சாதனையைப் படைத்துள்ளார் போர்த்துக்கல் அணியின் தலைவரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ. 111 கோல்களுடன் ரொனால்டோ அரியணை ஏறியுள்ளார்.**



கட்டாரில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்றுவருகின்றன. போர்த்துக்கல் அணி அயர்லாந்தை நேற்று முன்தினம் நள்ளிரவு எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வெற்றிபெற்றது.

போர்த்துக்கலின் சார்பாகப் பதிவான இரண்டு கோல்களையும் ரொனால்டோவே பதிவுசெய்தார். 89ஆவது மற்றும் 96ஆவது நிமிடங்களில் இந்தக் கோல்களை அவர் பதிவுசெய்தார்.

ஈரானின் முன்னாள் வீரரான அலி டாய் 109 கோல்களுடன் முதலிடத்தில் இருந்த நிலையில், ரொனால்டோ ஏற்கனவே அவரைச் சமன் செய்திருந்தார். தற்போது கால்பந்தாட்ட உலகில் அதிக சர்வதேசக் கோல்களைப் பதிவுசெய்தவர் என்ற மகிமையை ரொனால்டோ பெற்றுள்ளார். மலேசியாவை சேர்ந்த முக்தர் தகாரி 89 கோல்கள் அடித்து 3ஆவது இடத்திலும், புஸ்காஸ் (ஹங்கேரி) 84 கோல்கள் அடித்து 4ஆவது இடத்திலும், காட்பிரே (ஷாம்பியா) 79 கோல்கள் அடித்து 5ஆவது இடத்திலும் உள்ளனர். (ம)






### ரி20 உலகக்கிண்ணம்

# எதிர்வரும் திங்கட்கிழமை இந்திய அணி அறிவிப்பு!

புதுடில்லி, செப். 4

ரி20 உலகக்கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடருக்கான இந்திய அணி எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பித்துள்ளது. இந்த ஆட்டம் முடிந்த பின்னர் தேர்வுக் குழுவினர்கூடி ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியைத் தெரிவுசெய்யவுள்ளனர். (ம)

### இரண்டாவது ரி20

# நியூசிலாந்துக்கு மீண்டும் தோல்வி

*பங்களாதேஷ் அதிர்ச்சி வைத்தியம்*

டாக்கா, செப். 4

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று 5 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 2:0 என்று முன்னிலை வகிக்கின்றது பங்களாதேஷ் அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 6 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நயீம் 39 ஓட்டங்களையும் மகமதுல்லா 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரசின் ரவீந்ர 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதையடுத்து 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பங்களாதேஷ். லாதம் 69 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் சகிப் அல் ஹசன், மெகடி ஹசன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். மகமதுல்லா ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இலங்கை

கொழும்பு, செப். 4




தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கின்றது இலங்கை அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 300 ஓட்டங்களைக் குவித்தது. அவிஸ்க பெர்னாண்டோ அதிகபட்சமாக 118 ஓட்டங்களைக் குவித்தார். அசலன்க 72 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரபாடா, மகாராஜ் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு எய்டன் மார்க்ரம் அசத்தலான ஆரம்பத்தைக் கொடுத்தார். அவரும் பவுமாவும் நின்று நிதானித்து விளையாடினார்கள். தென்னாபிரிக்க அணி ஓர் இலக்கை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது காயம் காரணமாக வெளியேறினார் பவுமா. இது தென்னாபிரிக்க அணிக்குப் பின்னடைவாக அமைந்தது. 96 ஓட்டங்களுடன் மார்க்ரமும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 286 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இலங்கைஅணி ஆட்டநாயகனாக அவிஸ்க பெர்னாண்டோ தெரிவானார். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ம)

# ஜோகோவிக் முன்னேற்றம்

வொஷிங்டன், செப். 4

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் சேர்பிய வீரரும் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவருமான நொவக் ஜோகோவிக்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஜோகோவிக்கும் நெதர்லாந்து வீரரான டேலனும் மோதினார்கள். ஆரம்பம் முதலே சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிக் 6:2, 6:3, 6:2 என்ற செற் கணக்கில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)



## காணி விற்பனைக்குண்டு

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389, 077 614 7333**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.